Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 32 சுபகிருது வருடம், ஆடி மாதம் 19ஆம் திகதி வியாழக்கிழமை
(04.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 05 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## கொரோனா பரவலால் பாடசாலைகள் மூடப்படாது!



கல்வி அமைச்சர் சுசில் அறிவிப்பு

02 பக்கம்

## எரிபொருள் கப்பல்கள் இலங்கை வருகின்றன



அமைச்சர் காஞ்சன தகவல்

02 பக்கம்

# தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு!



## சிம்மாசன உரையில் ஜனாதிபதி ரணில் பகிரங்க அறிவிப்பு; பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் பரிகாரம்

- சர்வகட்சி அரசுக்கு மீண்டும் அழைப்பு
- உயிர் மூச்சு வழங்கிய இந்தியாவுக்கு நன்றி
- எரிபொருள் நெருக்கடியை இவ்வருட இறுதிவரை தாங்கிக்கொள்க
- சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு தொடரும்
- ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்தி வேலைத்திட்டம்
- ஏழை மக்களுக்கு குறுகியகால நிவாரணம்
- சமூக நியாயாதிக்க ஆணைக்குழு ஸ்தாபிப்பு
- அடுத்த 25 வருடங்களுக்கு தேசிய பொருளாதார கொள்கை
- 2048இல் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றும் முயற்சி
- வெளிநாட்டு கொள்கையில் உறுதித்தன்மை
- அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாப்பேன் : வன்முறைக்கு இடமளியேன்
- எரிபொருள் வரிசையில் அத்துமீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை
- அடுத்தத் தேர்தலில் அதிக இளைஞர் யுவதிகள் நாடாளுமன்றம் வர வாய்ப்பு
- இன, மத, கட்சி, குல பேதங்களை ஒழிக்க வாய்ப்பு
- பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க செயற்றிட்டம்
- இலஞ்ச ஊழலை ஒழிக்க தேசியக்கொள்கை
- சமூக அரசியல் மறுசீரமைப்பு மக்கள் சபை ஸ்தாபிப்பு

யோ.தர்மராஜ்

இலங்கையில் பல வருட காலமாக தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதேபோன்று, பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோமென ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று தனது அக்கிராசன உரையின்போது தெரிவித்தார்.

முழுமையான விபரங்கள்07 பக்கம்

## ஜனாதிபதியின் சிம்மாசன உரையை காத்திரமாக முன்நகர்த்த வேண்டும்!



### அமைச்சர் டக்ளஸ் தமிழ்த் தரப்புகளிடம் வேண்டுகோள்

ஜனாதிபதியின் சிம்மாசன உரையை காத்திரமாக முன்னெடுத்துச் சென்று, பொருளாதார சவால்களை தீர்க்கின்ற முயற்சிகளுக்குச் சமாந்தரமாக, தமிழ் மக்களின் எதிர்ப் பார்ப்புகளுக்கான தீர்வுகளையும் முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புகளை தமிழ்த் தரப்புகள் ஜனாதிபதிக்கு வழங்கவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

02 பக்கம்

## சர்வகட்சி அரசு தொடர்பான பேச்சுக்கு எதிர்க்கட்சி இணக்கம்



### ஜனாதிபதியின் அழைப்பினை ஏற்றது ஐக்கிய மக்கள் சக்தி

பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அனுப்பிய கடிதத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி பதிலளித்துள்ளது.

02 பக்கம்

## வெள்ளம் காரணமாக விவசாயிகள் பாதிப்பு



க.கிஷாந்தன்

மலையகத்தில் மூன்று நாட்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது, மட்டுமல்லாமல் குடும்ப வருமானத்திற்காக...

02 பக்கம்

## அரச கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் 09, 10 மற்றும் 12ஆம் திகதிகளில்



- 2022 வரவுசெலவுத்திட்டத்துக்கான திருத்தச் சட்டமூலம் 09ஆம் திகதி
- 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில்

02 பக்கம்



## தூண்டிலில் சிக்கிய 25 கிலோ எடை மீன்

பாறுக் ஷிஹான்

25 கிலோ பாரிய எடையுள்ள கொடுவா மீன் சிறிய இயந்திர தூண்டிலில் சிக்கியுள்ளது.

அம்பாறை மாவட்ட காரைதீவு மற்றும் நிந்தவூர் பகுதிகளை இணைக்கும் முகத்துவாரத்து கடற்கரையில் இரு இளைஞர்கள் நேற்று கடலில் தூண்டில் மூலம் குறித்த மீனைப் பிடித்து கரைக்கு கொண்டுவந்துள்ளனர்.

02 பக்கம்

## ஜனாதிபதி இல்ல பியர் குவளையை வீட்டுக்கு எடுத்துச் சென்றவர் கைது

ஜூலை 09ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் போராட்டத்தின்போது, கோட்டையிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து பியர் குவளையை திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..




## உஷ்



ஜனாதிபதியின் அக்கிராசன உரை முடிந்த கையோடு நடந்த தேநீர் விருந்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கலந்துகொள்ளவில்லையாம்.

பேச்சுமுடிந்த கையோடு எம்.பிக்களை தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றதால் எதிர்க்கட்சி எம்.பிக்கள் சஜித்தோடு அதிருப்தியில் இருப்பதாக தகவல்.

தேநீர் மண்டபத்தில் எம்.பிக்களுடன் சாவகாசமாக உரையாடியபோது, உரையில் மலையக மக்களையும் சேர்த்தமைக்காக நன்றி என்று ஜனாதிபதியிடம் குறிப்பிட்டாராம் மனோ கணேசன் எம்.பி.

சர்வகட்சி கூட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில், மனோ கணேசனுடன் தொலைபேசியில் பேசியபோது, அக்கிராசன உரையில் மலையக மக்களை மறந்துவிடாதீர்கள் என்று கூறினாராம் மனோ. அதனை நினைவிற்கொண்டு உரையில் சேர்த்தமைக்காகவே நேற்று நன்றி தெரிவித்திருக்கிறார் மனோ எம்.பி.

## 9ஆவது நாடாளுமன்ற 3ஆவது கூட்டத்தொடர்

ஜனாதிபதியினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைப்பு


02 பக்கம்

## சீரற்ற காலநிலை தொடர்கிறது; 5 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

யோ.தர்மராஜ்

நாட்டில் தொடரும் சீரற்ற காலநிலையால், ஹம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கையும் காலி, கண்டி, மாத்தளை ஆகிய...

02 பக்கம்





ஜனாதிபதி உரைக்குப் பின்னர் நேற்று இடம்பெற்ற தேநீர் விருந்தின்போது எடுக்கப்பட்ட படங்கள்

# வெள்ளிக்கிழமைக்குள் வெளியேறுங்கள்!

## பொலிஸ் விசேட அறிவிப்பு

காலிமுகத்திடல் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருப்பவர்களை நாளை 5ஆம் திகதி மாலை 5 மணிக்குள் அங்கிருந்து வெளியேறவேண்டுமென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, காலிமுகத்திடல் மற்றும் அதனை அண்மித்த நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான பகுதிகளிலிருந்து வெளியேறுமாறு கோட்டை பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

போராட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் போராட்டங்களை முன்னெடுக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

# ஜோசப் ஸ்டாலின் கைது

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பொலிஸாரினால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார். கூட்டமொன்றில் கலந்துகொண்டிருந்தபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.நீதிமன்ற உத்தரவை மீறினார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தூண்டிலில் சிக்கிய ...

சுமார் 18 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய குறித்த மீன் தூண்டிலில் சிக்குண்டு கடலில் அட்டகாசம் காட்டியதுடன், இளைஞர்கள் குறித்த மீனை கடலில் இருந்து கரைக்கு கொண்டுவருவதற்கு பெரும் சிரமங்களை மேற்கொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட கடற்கரையில் பருவ மாற்றம் காரணமாக அதிகளவில் மழை பெய்து வருவதுடன், சில முகத்துவாரங்களும் வெட்டப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பொழுதுபோக்கிற்காக சிலர் தூண்டில் மூலம் அப்பகுதியில் மீன்களை பிடித்து வருவதனை காணமுடிகின்றது.

## கொரோனா பரவலால்...

கொரோனா தொற்று பரவினாலும் பாடசாலைகள் மீள மூடப்படாது எனவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்

மாணவரொருவர் கொவிட் தொற்றுக்கு உள்ளானால், அவருடன் தொடர்பில் இருந்தவர்களை தனிமைப்படுத்திவிட்டு, கற்பித்தல் செயற்பாடுகளை தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், பாடசாலை நடத்தும் விதம் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய வழிகாட்டல்கள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வருட புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ளதுடன், உயர்தரப் பரீட்சை நவம்பர் 28ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்படும் என்றும், இந்த வருடத்திற்கான சாதாரண தரப் பரீட்சை அடுத்த வருடம் ஏப்ரல் 2ஆம் திகதிக்குப் பின்னர் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள் கப்பல்கள்...

இலங்கைக்கு அருகில் நங்கூரமிட்டு நிறுத்தப் பட்டிருந்த டீசல் கப்பலுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதிலிருந்து டீசலை இறக்கும் பணி நேற்று (03) ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், மற்றொரு பெற்றோல், டீசல் கப்பலுக்கு முற்பணமும் செலுத்தப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் .

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது விமான எரிபொருளை கொள்வனவு செய்வதற்கான ஒரு வருட நீண்டகால ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது.

விமான எரிபொருள் முதல் தொகுதி எதிர்வரும் 12ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிக்கிடையில் வந்தடையும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சர்வகட்சி அரசு தொடர்பான ...

இது தொடர்பில் அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச, ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில், நாட்டில் நிலவிவரும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடியை நிவர்த்திசெய்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுக்கத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து எடுக்கவேண்டியுள்ளது.

இதனை கருத்திற்கொண்டு அவற்றுக்கு தீர்வுகாணும் முகமாக 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு முறைமையை மீண்டும் அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட அடுத்தகட்டம் குறித்த கலந்துரையாடலுக்காக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்பதாக ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்றுக்கொண்டுள்ளதாக சஜித் பிரேமதாச அக்கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச கொள்கைப்...

ஜனாதிபதி நேற்று (03) நாடாளுமன்றத்தில் முன்வைத்த அரசாங்கத்தின் கொள்கைப் பிரடகனம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை எதிர்வரும் 09, 10 மற்றும் 12ஆம் திகதிகளில் நடத்துவதற்கு நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மூன்று நாட்கள் விவாதத்துக்கு வழங்குமாறு கட்சித் தலைவர்கள் விடுத்த கோரிக்கைக்கமைய இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய நாடாளுமன்றம் எதிர்வரும் 09ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்குக் கூடவிருப்பதுடன் பி.ப. 4.30 மணிவரை விவாதம் நடைபெறும். அத்துடன், எதிர்வரும் 10 மற்றும் 12ஆம் திகதிகளி'ல் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை நாடாளுமன்றம் கூடவுள்ளது. இந்த விவாதம் சபை ஒத்திவைப்பு விவாதமாக இடம்பெறும் என்றும், விவாதம் நிறைவடையும்போது வாக்கெடுப்பு நடத்தப்படாது என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் 09ஆம் திகதி 2022ஆம் வருடத்துக்கான 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க நிதி ஒதுக்கீட்டுச் சட்டம் (வரவு- செலவுத்திட்டம்) தொடர்பில் முன்வைக்கப்படும் திருத்தச் சட்டமூலமும், எதிர்வரும் 10ஆம் திகதி 22ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அண்மையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இரத்துசெய்யப்பட்ட குழுக்களைப் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் நியமிப்பது தொர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இதற்கமைய தெரிவுக் குழுவை (Committee of Selection) எதிர்வரும் 09ஆம் திகதி அமைத்த பின்னர் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு உள்ளிட்ட ஏனைய குழுக்களை விரைவில் நியமிப்பதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

## ஜனாதிபதி இல்ல பியர்...

ரங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான சந்தேக நபர் வெல்டிங் தொழிலில் ஈடுபட்டு வருபவர் என்பதுடன், குருநாகலில் வெல்லவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலும் இரு நண்பர்களுடன் ஜூலை 09ஆம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டதாகவும், எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்ட ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்பின்னர், ஜனாதிபதியின் இல்லத்தில் இருந்த பியர் போத்தலைக் கைப்பற்றிய குழுவினர், அந்த வளாகத்தில் இருந்த பியர் குவளைகளை பயன்படுத்தி மது அருந்தினர்.

சந்தேக நபர் பியர் குவளையை நினைவுப் பொருளாக மீண்டும் தனது வீட்டிற்கு கொண்டு வந்ததாக கூறப்படுகிறது.

அந்த நபர் ஜனாதிபதியின் வீட்டில் தனது நண்பர்களுடன் பியர் குவளையுடன் இருந்த புகைப்படத்தை தனது பேஸ்புக் கணக்கில் பகிர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜூலை 09ஆம் திகதி இடம்பெற்ற போராட்டங்கள் தொடர்பான பேஸ்புக் உள்ளடக்கம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் வீட்டிற்கு சட்டவிரோதமாக பிரவேசித்தமை மற்றும் பொருட்களை சட்டவிரோதமாக வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டில் சந்தேகநபர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளதுடன், குறித்த பியர் குவளையை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## 9ஆவது நாடாளுமன்ற ...

**யோ.தர்மராஜ்**

9ஆவது நாடாளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்படி, நேற்றுக் காலை 10.30 மணிக்கு சபை அமர்வை ஆரம்பித்துவைத்து, தன்னுடைய அக்கிராசன உரையை நிகழ்த்தினார்.

9ஆவது நாடாளுமன்றத்தின் 2ஆவது கூட்டத்தொடர் கடந்த 28ஆம் திகதியுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இடைநிறுத்தப்பட்டது. 3ஆவது கூட்டத்தொடர் 3ஆம் திகதி காலை 10.30 மணிக்கு ஆரம்பாகும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி, 3ஆவது கூட்டத்தொடரை ஆரம்பிப்பதற்கான நிகழ்வு நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றது.

காலை 09.50 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் வரவேற்றார். இதனையடுத்து, காலை 09.53 மணியளவில் நிகழ்வுக்கு வருகை தந்த பிரதமர் தினேஷ் குணவர்தனவை சபாநாயகர் வரவேற்றார்.

அதனைத்தொடர்ந்து காலை 9.55 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகைதந்தார். இதன்போது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க ஆகியோரால் நாடாளுமன்ற கட்டடத்தின் பிரதான நுழைவாயிலின் படிக்கட்டுக்கு அருகில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வரவேற்கப்பட்டார்.

எனினும், ஜனாதிபதியின் வருகையின்போது, ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்த நிகழ்வு எளிமையாக இடம்பெற்றதுடன், மரியாதை வேட்டுகள் தீர்த்தல் மற்றும் வாகனத் தொடரணி என எதுவும் இடம்பெறவில்லை.

இதனையடுத்து, அங்கு முப்படையினரால் ஜனாதிபதிக்கு அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டதுடன், தேசிய கொடியேற்றத்துடன் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. இதனையடுத்து படைக்கல சேவிதர், பிரதி படைக்கல சேவிதர் மற்றும் உதவி படைக்கல சேவிதர் ஆகியோர் முன்செல்ல சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியோரினால் ஜனாதிபதி நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதன்போது நாடாளுமன்றத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே கொழும்பு தேவிபாலிகா வித்தியாலய மாணவிகளால் ஜயமங்கல கீதம் இசைக்கப்பட்டது.

இதன் பின்னர், உடையணி அறைக்கு வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை மு.ப. 10.25 மணிக்கு செங்கோலுடன், சபாநாயகர், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் படைக்கல சேவிதர்களினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சபைக்கு அழைத்துவரப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து மு.ப. 10.30 மணியளவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சபாநாயகரின் கதிரையில் அமர்ந்து 9 ஆவது நாடாளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடரை வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்து, அக்கிராசனத்தை ஏற்று அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தார்.

இதன்போது, ஜனாதிபதியின் ஆசனத்தில் ஜனாதிபதியின் இலட்சினைக்குப் பதிலாக அரசாங்கத்தின் இலட்சினை பொருத்தப்பட்டிருந்தது விசேட அம்சமாகும்.

45 நிமிடங்களுக்கு மேலான தன்னுடைய அக்கிராசன உரையை முடித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சபை அமர்வுகளை எதிர்வரும் 9ஆம் திகதிவரை ஒத்திவைப்பதாக அறிவித்து, சபை அமர்வை ஒத்திவைத்தார்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அழைக்கப்பட்ட விருந்தினர்களுக்கு தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மற்றும் முதற்பெண்மணியான அவருடைய பாரியார் ஆகியோர் நாடாளுமன்றத்தைவிட்டு வெளியேறும்போதும் இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

9ஆவது நாடாளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் வெளிநாட்டு இராஜதந்திரிகள், பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சட்டமா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட விசேட விருந்தினர்கள் வருகை தந்திருந்தனர்.

## ஜனாதிபதியின் சிம்மாசன....

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் நேற்று (03.08.2022) ஆற்றிய சிம்மாசன உரை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர், தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் ஜனாதிபதியின் சிம்மாசன உரையில் பிரதிபலித்திருக்கின்றமையை வரவேற்பதாகவும், குறித்த விடயங்கள் படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படுவதற்கு, பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், ''குறித்த உரையில், ஈ.பி.டி.பி. கட்சியினால் அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் முன்வைக்கப்பட்டிருந்த, தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான தீர்வு மற்றும் காணிப் பிரச்சினைகள், யுத்தப் பாதிப்புகளை நிவர்த்திசெய்தல் உட்பட்ட விடயங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை எமது தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்கும் அரசியல் அணுகுமுறைகளுக்குமான வெற்றியாகவே கருதுகின்றோம்.

இவ்வாறான சூழல்களை ஏனைய தமிழ் தரப்புகளும் எமது மக்களின் அபிலாஷைகளை முன்நகர்த்துவதற்கான சந்தர்ப்பங்களாக பயன்படுத்த வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் அதற்கு பின்னர் கிடைத்த சந்தர்ப்பங்களையும் தமிழ் தலைமைகள் பயன்படுத்திக்கொள்ள தவறியமையினால் எமது மக்கள் பேரவலங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், தற்போது கிடைத்துள்ள வாய்ப்பினை தமிழ்த் தலைமைகள் காத்திரமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

குறிப்பாக ஜனாதிபதியினால் உருவாக்க முயற்சிக்கப்படுகின்ற அனைத்துக் கட்சி அரசாங்கத்தினை தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்நகர்த்துவதற்கான ஆரோக்கியமான தளமாக அனைத்து தமிழ் தரப்புகளும் பயன்படுத்த வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளம் காரணமாக ...

விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த அதிகமானோர் மழை காரணமாகவும், வெள்ளம் காரணமாக தனது தோட்டங்களில் பயிரிடப்பட்ட மரக்கறி வகைகள் அனைத்தும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டதால் விவசாயிகள் பாரிய நட்டத்துடன் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை அடைகின்றனர்.

கொட்டகலை, பத்தனை கிறேக்கிலி தோட்டம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெவோன் நீர்வீழ்ச்சிக்கு நீரை ஏந்தும் கிளை ஆறான பத்தனை ஆறு பெருக்கெடுத்ததால் மரக்கறி தோட்டங்களில் வெள்ளம் பாய்ந்தோடியதால் இப்பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதிகமான விவசாயிகள் விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்கு வங்கிகளில் மற்றும் தங்க நகைகளையும் அடகு வைத்தும், கடன் வழங்கும் நிறுவனங்களில் அதிகமான கடன் தொகையை பெற்று விவசாய நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், வெள்ளப்பெருக்கினால் செலவுசெய்யப்பட்ட தொகையை கூட மீட்க முடியாத அளவிற்கு பாரிய பொருளாதார பிரச்சினைகளை சந்திப்பதாக விவசாயத்தை நம்பிருக்கும் விவசாய குடும்பங்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் இதேபோன்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நுவரெலியா மாவட்ட விவசாய திணைக்களம் எவ்வித நிவாரண உதவிகளையும் தரவில்லை என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் உதவிகளை வழங்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கையாகும்.

## சீரற்ற காலநிலை தொடர்கிறது:...

மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளதாக மண்சரிவு எச்சரிக்கையும் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இன்றும் பல மாவட்டங் களில் பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் கடந்த சில நாட்களாக தொடரும் சீரற்ற காலநிலையால் மலையக பகுதிகள் உள்ளிட்ட 10 மாவட்டங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. பல பகுதிகளில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், மேலும் பல பகுதிகளில் மண்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. இந்த சீரற்ற காலநிலையால், 9 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 191 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 819 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார். மேலும் நால்வர் காணாமல் போயுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 443 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 649 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மூவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காணாமல்போயுள்ளனர். கண்டி மாவட்டத்தில் 837 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 809 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் காணாமல்போயுள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 34 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார்.

காலி மாவட்டத்தில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாத்தறை மாவட்டத்தில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாத்தறை மாவட்டத்தில் 50 குடும்பங்களைச் சேர்ந்த 192 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் ஆயிரத்து 788 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 896 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 180 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, 480 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 313 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒரு வீடு முற்றாகவும் 982 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

**மண்சரிவு எச்சரிக்கை நீடிப்பு**

நாட்டில் 8 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுளளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை இன்று (04) வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதில், ஹம்பாந்தோட்டை, கேகாலை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சிவப்பு எச்சரிக்கை இன்றுவரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மழை எச்சரிக்கை**

தென்மேற்குப் பருவப்பெயர்ச்சி தீவிரமடைந்துள்ள நிலையில், அடுத்த சில நாட்களில் மேற்கு மற்றும் தெற்கு கடற்பரப்புகளிலும் தீவின் தென்மேற்குப் பகுதியிலும் மழை மற்றும் காற்றின் நிலை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், சப்ரகமுவ மாகாணம், கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை போன்ற மாவட்டங்களில் பல இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. வடக்கு மற்றும் வட மத்திய மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

# அரசினது நல்லிணக்கத்தின் முதற்புள்ளியாக அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

நல்லிணக்கத்திற்கான முதற்புள்ளியாக அரசியல்கைதிகள் அல்லது போர் கைதிகளை அரசு விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பு, அதன்மூலம் சமூகங்களிடையே பரஸ்பர புரிந்துணர்வும் நம்பிக்கையும் ஏற்படும். அதனூடாக ஒன்றுபட்ட இலங்கையர்களாக நாட்டை கட்டியெழுப்பமுடியும் எனவும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின்கீழ் கைதுசெய்யப்பட்டு 10 முதல் 26 ஆண்டுகளாக நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் 46 தமிழ் அரசியல் கைதிகள் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் தண்டனை கைதிகள், மேல்முறையீட்டு கைதிகள், விளக்கமறியல் சந்தேக நபர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனமுறுகலுக்கு அந்தந்த காலங்களில் தீர்வு காணப்படாததன் காரணமாகவே இன்று நாடு இந்த அளவிற்கு பொருளாதார சீரழிவை கொண்டிருக்கின்றது. ஆகவே அந்த தவறுகளை நாம் மீண்டும் மீண்டும் தொடர தலைப்படக்கூடாது.

ஒரு சமூகத்தின் சுதந்திர வாழ்வுக்கான பயணத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்களை, போர் ஓய்ந்து இத்தனை ஆண்டுகள் கடந்த பின்பும் சிறைப்படுத்தி வைத்திருப்பது என்பது எந்த வகையிலும் அறமாக இருக்க முடியாது. இது ஒரு வகையில் இனத்தின் மீதான தனிநபர் பழிவாங்கலாகவே மக்களால் பார்க்கப்படுகிறது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஆராய்வதாக ஜனாதிபதி தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது. இங்கு ஒரு முக்கியமான விடயத்தை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். அதாவது பதவிக்கு வருகின்ற ஒவ்வொரு அரசாங்கங்களும் அரசியல் கைதிகள் தொடர்பாக ஆணைக்குழுக்கள் அமைப்பது, சிறப்பு நீதிமன்றம் நிறுவுவது, வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என உரைப்பது என்று காலம் காலமாக சொல்லப் பட்டு வருகின்ற மாயவித்தையை முதலில் கைவிடவேண்டும். இதுவரை எந்த ஒரு குழுக்களினதும் பரிந்துரைகளை எந்தவொரு அரசும் முழுமையாக நடைமுறைப்படுத்தியதாக சரித்திரங்கள் இல்லை.

ஆகவே கைதிகள் விடுதலையை ஆராய்வதாகக்கூறி, இதற்கு மேலும் காலம் கடத்துவதை தவிர்த்து உண்மையான நல்லெண்ணத்துடன் சிந்தித்து அரசியல் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டு, வகைபிரிக்காமல் அனைத்து அரசியல் கைதிகளுக்கும் அவர்கள் தம்குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ ஒரு சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும்.

இன்று நாட்டில் நியாயமாக சிந்திக்கக்கூடிய எந்தத் தரப்பினரும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக தோன்றவில்லை.

கடந்த காலங்களை போலன்றி, தற்போது சகோதர சிங்கள மக்களும் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகின்ற நிலைமையே மேலோங்கி காணப்படுகிறது. எனவே, தசாப்தங்கள் கடந்தும் சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்ற பொறுப்பு அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த சந்தர்ப்பத்திலே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தை மனிதநேய அடிப்படையில் கையாளுமாறு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச சமூகங்கள் வலியுறுத்தவேண்டும்.

அதேபோன்று புலம்பெயர்தமிழர்கள் அரசின்மீதான நம்பகத்தன்மையை வலுப்படுத்தும் பொருட்டு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்தை இன்னும் அழுத்தமாக முன்னிறுத்த வேண்டும்.

மேலும், நாடாளுமன்றத்திலே அங்கம் வகிக்கின்ற அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிபேதமற்று இந்த மனிதாபிமான செயற்கருமத்தை நிறைவேற்றுவதற்கு அரசுடன் இணக்கமான பேச்சுகளை தொடரவேண்டும்.

தொழிற்சங்கங்கள் மற்றும் ஒட்டுமொத்த சிவில்அமைப்புகளும் நிறுவனங்களும் அரசியல் கைதிகள் விடயத்தில் தங்களது நல்லெண்ண சமிக்ஞைகளை அரசை நோக்கி வெளிப்படுத்த வேண்டிய தருணம் என்று கருதுகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்திஜீவிகளும் பல்கலைக்கழக சமூகங்களும் மதப்பெரியார்களும் தமது பொறுப்புணர்ந்து இன்றைய கால கடமையில் பங்கேற்கவேண்டும் என தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

# 29ஆவது ஆசியன் பிராந்திய மாநாட்டில் பங்கேற்க அமைச்சர் அலி சப்ரி கம்போடியாவுக்கு விஜயம்

கம்போடியாவின் புனோம் பென் நகரில் இன்றும்(04), நாளையும் (05)வரை நடைபெறவுள்ள 29ஆவது ஆசியன் பிராந்திய மன்றத்தின் அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் எம்.யூ.எம். அலி சப்ரி விஜயம் செய்யவுள்ளார்.

27 உறுப்பினர்களைக் கொண்ட ஆசியான் பிராந்திய மன்றத்தில் 10 ஆசியன் உறுப்பு நாடுகள், உரையாடல் கூட்டாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் அவுஸ்திரேலியா, கனடா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, கொரியக் குடியரசு, ரஷ்யா மற்றும் அமெரிக்கா, பங்களாதேஷ், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, மங்கோலியா, பாகிஸ்தான், இலங்கை, பப்புவா நியூகினியா மற்றும் திமோர்-லெஸ்டே ஆகியன உள்ளடங்கும். 2007ஆம் ஆண்டு முதல் இலங்கை மன்றத்தில் உறுப்பினராக உள்ளது.

ஆசியான் ஏ.சி.டி.: சவால்களை ஒன்றாக எதிர்கொள்ளுதல் என்ற கருப்பொருளின் கீழ், ஆசியானின் தற்போதைய தலைமை நாடான கம்போடியா இந்த மன்றத்தை நடத்துகின்றது.

ஆசியான் பிராந்திய மன்றமானது ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கருத்தொற்றுமை அடிப்படையிலான முடிவெடுப்பதற்கும் வெளிப்படையான உரையாடலுக்கும் ஒரு முக்கியமான தளமாக அமைவதுடன், பிரச்சினைகள் மற்றும் கோவிட்-19 தொற்று நோய்க்குப் பிந்தைய மீட்பு மற்றும் உலகளாவிய சவால்களை கூட்டாக எதிர்கொள்ளுதல் போன்ற அழுத்தமான விடயங்கள் குறித்து உறுப்பினர்கள் கலந்துரையாடவும் கூட்டுறவு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் ஒரு மன்றத்தை வழங்குகின்றது.

கோவிட் தொற்றுநோய்க்குப் பின்னர் மன்றம் நேரில் சந்திப்பது இதுவே முதல் முறையாகும்.

இருதரப்பு கலந்துரையாடல்களுக்காக மன்றத்தின் பக்க அம்சமாக அமைச்சர் அலி சப்ரி பல பிரதிநிதிகளைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மாணவனை மோசமாக தாக்கிய ஆசிரியர் - பெற்றோர் கவலை

(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி கோணாவில் பாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவன் ஒருவனை ஆசிரியர் மிக மோசமாக தாக்கியதில் மாணவன் கையில் காயம் மற்றும் உட்காயங்கள் ஏற்பட்டுள்ளதாக பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,



குறித்த பாடசாலையில் தரம் 10இல் கல்விகற்கும் மாணவன், கடந்த வாரம் தனது துவிச்சக்கர வண்டியை தொலைத்த நிலையில் மூன்று நாட்களாக பாடசாலைக்குச் செல்லவில்லை எனவும், பின்னர் இவ்வாரம் பாடசாலைக்குச் சென்ற நிலையில் குறித்த மாணவன் பாடசாலைக்குச் செல்லாத நாட்களில் வழங்கப்பட்ட வீட்டுப் பாடங்களை மாணவன் செய்யவில்லை எனத் தெரிவித்து பெரியளவிலான தடி ஒன்றினால் மாணவனை தாக்கியுள்ளார். இதனால் கையில் காயம் ஏற்பட்டுள்ளதோடு, வீக்கம் மற்றும் உட் காயம் காரணமாக மாணவன் பாதிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் தெரிவித்துள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் உப அதிபரின் கவனத்திற்குகொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, குறித்த மாணவன் தற்போது பாடசாலைக்கு செல்வதனை விரும்பவில்லை என்றும் எனவே அவனை வேறு பாடசாலை ஒன்றில் இணைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு வினவியபோது, குறித்த சம்பவம் இடம்பெற்றதனை அவர்கள் உறுதிபடுத்தியதோடு இது தொடர்பில் கோட்டக் கல்வி அதிகாரி மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

# அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நிதியுதவி

## இராதா எம்.பி. தெரிவிப்பு

(நுவரெலியா நிருபர்)

மலையகத்தில் சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச முன்வந்திருப்பதாக நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான காலநிலை தொடர்பாகவும் ஏற்பட்டிருக்கின்ற இழப்பீடுகள் தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை தொடர்ந்தே எதிர்க்கட்சித் தலைவர் இதனை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நிதி உதவியை மிகவிரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிப்புகள் தொடர்பாக நுவரெலியா மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் கேட்டு தெரிந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டுள்ளார். வேறு தேவைகள் இருப்பின் தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்களிடம் கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். பொருட்களுக்கு தட்டுப்பாடுகள் நிலவுமாக இருந்தால் வர்த்தக வாணிபத்துறை அமைச்சரின் கவனத்திற்கு



கொண்டு செல்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரதேச சபை உறுப்பினர் முல்லேரியாவில் சுட்டுக்கொலை

## இருவேறு பகுதிகளில் மேலும் இருவர் படுகொலை

முல்லேரியா வங்கி சந்தி பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் முல்லேரியா பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரான சுமுது ருக்ஷான் (38) உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அம்பத்தலே பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கைத்துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடுகண்ணாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெனிக்திவெல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்றுமுன்தினம் பெண்ணொருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். மெனிக்திவெலவைச் சேர்ந்த 26 வயதுடைய பெண்ணொருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தப் பெண்ணுடன் காதல்தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட நபரே கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், குளியாப்பிட்டிய அக்கர 40 என்ற இடத்தில் 24 வயதான நபர் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்தநாள் நிகழ்வொன்றுக்கு நண்பரின் வீட்டுக்குச் சென்றபோது நண்பரின் மனைவியுடன் அந்நபருக்கு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக நண்பரும் மேலும் இருவரும் இணைந்து தடியால் தாக்கி அவரைக் கொலைசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.





வத்துகாமம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான ஆடிப்பூர பெரு விழா சிவஸ்ரீ கி.தி.சிவகுமார் குருக்கள் மற்றும் கணேசன் சர்மா ஆகியோர் தலைமையில் இடம்பெற்றபோது சங்காபிஷேகம் வசந்த மண்டப பூஜை ஆகியன இடம்பெற்றன. (படப்பிடிப்பு: எஸ்.ராமதாஸ்)

# தெஹிவளை எஸ்.டி.எஸ். ஜயசிங்க மத்திய கல்லூரியின் குறைந்த வருமானம் பெறும் மாணவர்களுக்கு உலருணவு விநியோகம்






அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் பொருளாதார சரிவு ஆகியவற்றால் நாடு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், LIOC மற்றும் இந்திய CEO மன்றம் இணைந்து பல CSR நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகின்றன. கல்வி என்பது வறுமையை ஒழிப்பதில் பெரும்பங்கு வகிக்கும் மிகப்பெரிய கருவியாகும். அதேசமயம், பாடசாலை சிறார்களின் போஷாக்கு சமுதாயத்திற்கு, குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு முதன்மையான முன்னுரிமை கொண்டது. LIOC மற்றும் ICF என்பன தெஹிவளை, எஸ்.டி.எஸ். ஜயசிங்க மத்திய கல்லூரி மாணவர்களின் ஆதரவற்ற குடும்பங்களுக்கு ரூ.2மில்லியன் பெறுமதியான உலருணவுப் பொருட்களை வழங்குவதன் மூலம் சமூக மேம்பாட்டிற்கான தமது அர்ப்பணிப்பை மேலும் அதிகரித்துள்ளன.

LIOC மற்றும் ICF இன் இந்த முன்முயற்சி பாடசாலை நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த சவாலான நேரத்தில் உதவி தேவைப்படும் குடும்பங்களைக் கவனித்துக்கொள்ள முன்வந்தமை உள்ளூர் சமூகத்தால் பாராட்டப்பட்டது. குறிப்பாக, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதை கடினமாக்கியுள்ளது.

இந்நிகழ்வில் பேசிய LIOC முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா, "LIOC எப்பொழுதும் நல்ல நோக்கத்துக்காக பங்களிக்க முயற்சிக்கிறது. எங்களின் தற்போதைய முயற்சிகள் பொருளாதார சவால்களுக்கு எதிராக போராடுவதற்கும், உணவுப் பொருட்களின் தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும் பங்களிப்பது எப்போதும் நோக்கமாக உள்ளது. இதன்மூலம் வசதி குறைந்த மாணவர்களின் கல்வியை தடையின்றி தொடர வழிவகுக்கின்றது."

விழாவில் LIOC நிர்வாக இயக்குநர் மனோஜ் குப்தா, அதிபர் ஜகத் இடமேகம், துணை அதிபர் திருமதி. சபிதா குணதிலகா, இந்திய CEO மன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய உமேஷ் கௌதம், அசோக் லேலண்ட் பிரதம நிறைவேற்றதிகாரி மற்றும் கிஷோர் ரெட்டி - பிளாட்டினம் ரியாலிட்டி இன்வெஸ்ட்மெண்ட்ஸ் வன் ஹொபிற்றாலிற்றி PTPL (இலங்கை) ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த உன்னத வாய்ப்பை வழங்கியதற்காக பள்ளி நிர்வாகத்திற்கு LIOC மற்றும் ICF நன்றியை தெரிவித்ததுடன், அத்தகைய உதவியை தொடர்வதாகவும் அவர்களுக்கு உறுதியளித்தது. ஒரு சமூக பொறுப்புள்ள அமைப்பாக, CSR எப்போதும் அதன் வலுவான அடிப்படைகள் மற்றும் சமூகத்திற்கு மதிப்பு சேர்க்கும் அதன் பல்வேறு CSR செயல்பாடுகள் மூலம் சமூகத்துடன் இணைக்கும் முயற்சிகளுடன் செயல்படுகிறது.


## பகிரங்க ஏலவிற்பனை

வெலிபல் பினான்ஸ் நிறுவனத்தில் உத்தரவாத அடிப்படையில் அடகு வைத்து கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் இல: 310, காலி வீதி, கொழும்பு 03 இல் 2022 ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விட்கப்படும்.

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ வெலிபல் பினான்ஸ் நிறுவனத்திற்கு உரிமை உள்ளது

தங்க கடன் பிரிவு,
வெலிபல் பினான்ஸ் பீ எல் சீ
இல: 310, காலி வீதி, கொழும்பு 03

வெலிபல் ஃபினான்ஸ்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
வியாழக்கிழமை, ஒகஸ்ட் 04, 2022

# இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்படுவது மக்களே

நாட்டில் கடந்த சில தினங்களாக அடைமழை பெய்துவருவதுடன், ஆங்காங்கே வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகளால் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

சீரற்ற காலநிலை காரணமாக நேற்றுக் காலை வரை மூவாயிரத்து 37 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 289 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் மூவர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காணாமல்போயுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தளை, மாத்தறை, நுவரெலியா, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நுவரெலியா மாவட்டத்தில் 330 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 224 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கண்டியில் 837 குடும்பங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 809 பேரும், மாத்தளையில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரும், காலியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த எண்மரும், ஹம்பாந்தோட்டையில் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 23 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் 22 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இரத்தினபுரியில் ஆயிரத்து 765 குடும்பங்களைச் சேர்ந்த ஆறாயிரத்து 865 பேரும், கேகாலையில் 69 குடும்பங்களைச் சேர்ந்த 257 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவவில் மூவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டனர். தோட்டத் தொழிலாளர்களான அவர்கள் தமது தொழிலை முடித்துக்கொண்டு வீடு திரும்பும்போது இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர். மற்றுமொருவர் கண்டி பஸ்பாகேகோரளே பகுதியில் மாயமாகியுள்ளார்.

இதேவேளை, 485 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரத்து 374 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் மூவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்ததுடன், அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் மேற்குறித்த மாவட்டங்களில் தொடர்ந்தும் மழைபெய்வதற்கான வாய்ப்பு காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதன் காரணமாக பிரதான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், பல இடங்களில் மண்சரிவு அபாயம் இருப்பதன் காரணமாக போக்குவரத்துகள் தடைபட்டுள்ளன.

மேலும், மலையகத்தில் பிரதான நகரங்கள் நீரில் மூழ்கியதன் காரணமாக பாடசாலை மாணவர்களும், அன்றாட கடமைகளுக்குச் செல்வோரும் பாதிப்புகளை எதிர்நோக்கினர். அரசியல்வாதிகளாலும், அரச நிறுவனங்களாலும் உரியமுறையில் உட்கட்டமைப்புகள் மேற்கொள்ளப்படவில்லையென இதன்போது புலப்பட்டது.

எரிபொருள், எரிவாயு வரிசைகள் நீண்டு, மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இயற்கையின் சீற்றத்தையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவத்தினரும், கடற்படையினரும், பொலிஸாரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுகின்றனர். எனினும், பெருவெள்ளத்தையும், பாரிய மண்சரிவுகளையும் தவிர்க்க முடியாதல்லவா? அரசாங்கத்தினால் உரிய முறையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் ஓரளவுக்கேனும் பாதிப்புகளை தடுக்கக் கூடியதாக இருக்கும். நீண்டகால திட்டமிடல்கள் இல்லாத காரணத்தினாலேயே பாதிப்புகள் அதிகரித்துள்ளன.

மலையகத்தைப் பொறுத்தவரையில் நுவரெலியா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்.

தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு கடந்த காலங்களில் மலையகம் சார்ந்தோரிடம் இருந்தது.

எனினும், முறையான வகையில் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்களா என்பதை இவ்வாறான சந்தர்ப்பங்களில் அறிந்துகொள்ள முடியும். அம்பகமுவவில் ஆற்றைக் கடப்பதற்கு சாதாரண பாலம் ஒன்றை அமைக்க முடியாத அரசியல்வாதிகளே இன்று மக்கள் முன் சென்று இழப்புகளைப் பார்த்து முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

திடீர் மரணங்களை ஏற்றுக்கொள்வது சிரமமானதாகும். அவ்வாறு மரணங்கள் ஏற்படாவண்ணம் தூர நோக்கத்துடன் செயற்பட வேண்டியது அரசாங்கத்தினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் கடமை.

அந்தக் கடமையை முதற்கொண்டு செயற்படுவதற்கு இனியாவது மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.



கலாநிதி ஜெகான் பெரேரா

# நமக்கு தெரிந்த முன்னைய ரணில் வெளிக்கிளம்புவார் என நம்புவோம்!

போராட்ட இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களை தனிப்பட்டமுறையில் இலக்குவைப்பதன் மூலம் அந்த இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவருகின்ற முயற்சிகள் முன்னெப்போதையும் விட நாட்டை துருவமயப்படுத்திக் கொண்டிருக்கின்றன. போராட்டத்துக்கான அடிப்படைக் காரணிகளைக் கவனத்தில் எடுத்து கையாளுவதற்கு பதிலாக அரசாங்கம் போராட்ட இயக்கத்தின் முக்கியமான உறுப்பினர்களை வலுவற்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் அவசரகால சட்டத்தின் கீழ் இலக்குவைத்துக்கொண்டிருக்கிறது. இந்த அவசரகாலச்சட்ட சூழ்நிலையில் வழமையான சட்டமும், அதன் மூலம் கிடைக்கின்ற பாதுகாப்பு உத்தரவாதங்களும் இடைநிறுத்தப்படுகின்றன.

அரசாங்கத்தின் நாடாளுமன்ற இருப்புநிலை பலமானதாக தோன்றுகிறது, ஆனால், அரசாங்கத்துக்கான பொதுமக்களின் ஆதரவு மிகவும் பலவீனமானதாக இருக்கிறது என்று நாடுகளின் கடன்செலுத்தும் அந்தஸ்தை ஆராயும் 'ஃபிட்ஸ் ரேட்டிங் ஏஜென்சி' 28 ஜூலை 2022 அன்று தெரிவித்தது. அதனால், அரசாங்கம் போராட்டக்காரர்களை ஒடுக்குவதை விடுத்து, அவர்களின் நியாயபூர்வமான குரலுக்கு செவிசாய்த்து, அவர்களுடன் பயனுறுதியுடைய முறையில் பேச்சுவார்த்தையை நடத்தவேண்டியது முக்கியமானதாகும்.

திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி மாஹிம் மெண்டிஸ் அண்மையில் 'த ஐலண்ட்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியதைப் போன்று நாட்டில் வர்க்க மற்றும் சமூக அடிப்படைகளில் இடம்பெறுகின்ற துருவமயமாதல் போக்கு, அரசியல் சமுதாயத்தின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் ஆபத்தானதாகும். கலாநிதி மெண்டிஸின் கருத்தை நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த சுமார் 30 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சரியானது என்று நியாயப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களை வார இறுதியில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

கொந்தளிப்பான சூழல் நிலவுகின்ற குறிப்பிட்ட சில பகுதிகளில் அமைக்கப்பட்ட உள்ளூர் மட்ட மதங்களுக்கிடையிலான குழுக்களைச் சேர்ந்த அவர்களுடனான கலந்துரையாடலின்போது முக்கியமான விடயம் ஒன்று சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது பொருளாதார இடர்பாடுகள் உள்ளூர் மட்டத்தில் முரண்நிலைகளைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன. ஊழலும், தவறான நிர்வாகமும் தோற்கடிக்கப்படுவதை உறுதிசெய்யக்கூடிய முறைமை மாற்றத்தை (System Change ) சாதிப்பதற்கான போராட்டம் அமைதி வழியிலானதாக பேணப்படவேண்டியது முக்கியமானது என்ற இன்னொரு விடயமும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

அந்த சந்திப்பு முடிவடைந்து நான் புறப்படத் தயாரானதும் பெண்மணியொருவர் என்னிடம் வந்து தனியாக பேசமுடியுமா என்று கேட்டார். பிரச்சினையில் சிக்கிக்கொள்ள தான் விரும்பவில்லை என்று கூறிய அவர், வணபிதா ஜீவந்த பீரிஸை காப்பாற்ற எங்களால் ஏதாவது செய்யமுடியுமா என்று கேட்டார். வணபிதா பீரிஸ் இயங்குகின்ற இரத்தினபுரி மாவட்டத்தில் தொலஸ்வல பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அந்த பெண்மணி தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

அது வறிய இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழ்கின்ற பகுதி. அவர்களின் வேதனங்கள் மிகவும் குறைவானவை. தற்போதைய பணவீக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள்.

உணவுப்பொருட்களின் விலைகள் 100 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்துவிட்டன. நிலையான வருமானத்தைப் பெறுபவர்கள் குறிப்பாக தினம் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக சம்பாதிக்க முடியாமல் வறுமைக்கோட்டின் கீழான வருமானத்தைப் பெறுபவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வணபிதா பீரிஸை கைதுசெய்ய பொலிஸார் வந்தனர். ஆனால், அந்த மக்கள் அவர் தங்களுக்கு வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஏனென்றால், அவர்கள் தங்களது வாழ்க்கையை ஓட்டுவதற்கு வணபிதா உதவினார் என்று பெண்மணி கூறினார்.

### வணபிதா ஜீவந்த

வணபிதா ஜீவந்த பீரிஸ் கொழும்பு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு எதிரே முகாமிட்டிருந்த போராட்ட இயக்கத்தில் நன்கு அறியப்பட்ட முக்கியமான ஒரு பிரமுகர். அவருக்கு எதிராக பொலிஸார் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்திருக்கிறார்கள். போராட்ட இயக்கத்தில் அவரின் பங்கு தொடர்பில் விசாரணை நடத்த அவர்கள் விரும்புவதால் நாட்டை விட்டு அவர் வெளியேறாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு அவருக்கு எதிராக நீதிமன்ற உத்தரவொன்றும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சிவில் சமூக உறுப்பினர்கள், தொழிற்சங்கவாதிகள், தொழில் வாண்மையாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகள் என்று பலதரப்பட்டவர்களையும் உள்ளடக்கிய சீர்திருத்தங்களுக்கான கூட்டமைப்பின் (Collective for Reforms) ஒரு உறுப்பினர் என்ற வகையில் நான் போராட்ட இயக்கம் மற்றும் அதன் இலக்குகள் தொடர்பான கலந்துரையாடல்களில் பங்கேற்றிருந்தேன். அப்போது சந்தித்தவர்களில் வணபிதா பீரிஸும் ஒருவர். அவரில் வன்முறைச் சுபாவத்தையோ அல்லது கர்வத்தையோ நாம் காணவில்லை. கிறிஸ்தவ மதக்கோட்பாட்டினால் கடைப்பிடிக்கப்படுகின்ற மக்களுக்கு சேவைசெய்யும் தலைமைத்துவ பண்பை (Servant Leadership ) உருவகப்படுத்தும் ஒருவராகவே அவர் காணப்பட்டார். ஏனைய மதங்களிலும் கூட காணக்கூடியதாக இருக்கின்ற அந்த பண்பை அரசியல் தலைவர்கள் கடைப்பிடிப்பார்களாக இருந்தால் நாட்டை மாற்றியமைக்க முடியும்.

அதனால் வணபிதா பீரிஸ் கைதுசெய்யப்படக்கூடிய சாத்தியம் குறித்து கடுமையான கவலை வெளியிட்டு அவரின் சார்பில் 1640 கத்தோலிக்க மதகுருமார், கன்னியாஸ்திரிகள், குருநிலைப்படுத்தப்பட்ட சகோதரர்கள் மற்றும் சகோதரிகளும் இரத்தினபுரி பங்கின் (சப்ரகமுவ மாகாணம்) கத்தோலிக்க மதகுருவும் மனித உரிமைகள் ஆர்வலர்களும் மனுவொன்றில் கைச்சாத்திட்டமை எந்த ஆச்சரியத்தையும் தரவில்லை.

அரசாங்கத்தின் அணுகுமுறை தொடர்பில் கடுமையான கண்டனத்தொனியில் அந்த மனுவில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது ;

"அவசரகாலநிலைப் பிரகடனம் எதிர்க்கருத்து மீதான சகிப்புத்தன்மையின்மை பற்றி அச்சம் தரும் அரசியல் செய்தியொன்றை சொல்கிறது. கொடூரமான அவசரகால ஒழுங்கு விதிகள்



கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் இயக்கம் நடத்துவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை மீறுவதாகவும், அடாத்தான கைதுகள், நீண்ட தடுப்புக்காவல்களுக்கு வழிவகுக்கக்கூடியவையாகவும் அமைகின்றன. அவசரகால நிலையை பிரகடனம் செய்யும் ஜனாதிபதியின் தீர்மானத்தை நாடாளுமன்றம் அங்கீகரித்திருக்கிறது. இது நிறைவேற்று அதிகார பீடமும், சட்டவாக்க சபையும் ஒடுக்குமுறைப் பாதையில் செல்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகிறது."

தற்போதைய அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட தேர்தல்களில் பெறப்பட்ட மக்கள் ஆணையின் அடிப்படையில் சட்டரீதியாக அமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்ற போதிலும் கூட, அந்த ஆணையை இழந்த நியாயப்பாடற்ற அரசாங்கமாகவே பலராலும் நோக்கப்படுகிறது. இது சட்டரீதியாக நாடாளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியைக் கொண்ட அரசாங்கம். ஆனால், நாடாளுமன்றம் ஆணையை இழந்ததாகவே காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில், போராட்ட இயக்கத்தை கையாளுவதில் அடாவடிப்போக்கான அணுகுமுறையை கடைப்பிடிப்பது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும்.

சட்டரீதியாக அமைக்கப்பட்டதாக இருந்தாலும், நியாயப்பாடற்றதாக பலராலும் கருதப்படுகின்ற ஒரு அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒடுக்குமுறைப் போக்கு நாட்டில் மேலும் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. அத்தகையதொரு நிலைவரத்தை நாடு தாங்காது. இலங்கை அரசியல் உறுதிப்பாடு,வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகியவற்றை கொண்டதாகவும் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அரசாங்கம் ஒன்றைக் கொண்டதாகவும் இருந்தால் மாத்திரமே ஆதரவளிக்க முன்வர முடியும் என்று உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஜப்பான் போன்ற நீண்டகால நட்புநாடுகளும் தெளிவாக அறிவித்துவிட்டன.

### நழுவிச்செல்லும் நம்பிக்கை

நாட்டில் மக்களிடையே பிளவுகள் அதிகரித்துச்செல்கின்ற விரக்தி மிகுந்த இந்த சூழ்நிலையில், தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளைக் கையளுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விட சிறந்த ஒருவர் இல்லை என்ற ஒரு உணர்வு படித்த மற்றும் உயர் வர்க்கத்தவர்கள் மத்தியில் காணப்படுகிறது. புதிய ஜனாதிபதி தனது ஆற்றலை நிரூபிப்பதற்கு அவகாசம் வழங்குவதற்கு வணிக சமூகமும், வசதிபடைத்த பிரிவினரும் தயாராக இருக்கிறார்கள். சமுதாயத்தின் இந்த பிரிவினர் போராட்ட இயக்கத்தின் முன்னரங்கத்துக்கு தீவிரவாதப் போக்குடைய தலைமைத்துவம் வந்துவிட்டது என்று கருதி போராட்டத்தினால் ஏற்படக்கூடிய நீண்டகால விளைவுகள் குறித்து அச்சமடைந்துள்ளனர்.

ஆனால், கடுமையான எரிபொருள் நெருக்கடியும், மோசமான பணவீக்கமும் போராட்ட இயக்கம் இடைவிடாது தொடர்வதற்கான ஊக்கத்தைக் கொடுக்கின்றன. தற்போது காணப்படுவது போராட்ட இயக்கத்தில் ஒரு இடையமைதியே. சட்டம் ஒழுங்கு முற்றாக சீர்குலைந்துவிடும் என்று அஞ்சும் மேற்படி பிரிவினர் அரசாங்க உறுப்பினர்களின் 70 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறார்கள். தற்சமயம் ஜனாதிபதி விக்கிரமசிங்கவே பிரதான பாத்திரம். ஒரு அரசியல் தலைவர் என்ற வகையில் அவரது அனுபவமும், அறிவு முதிர்ச்சியும் உயர்வானவையாக இருக்கின்றன. கடந்த காலத்தில் பிரதமராக இருந்த வேளைகளில் அவர் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு ஒரு காரணத்தை கூறுவதென்றால் தனக்கு மேல் இருந்த ஜனாதிபதிகள் தனது முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தார்கள் என்று கூறமுடியும். அவர் பிரதமராக இருந்த காலகட்டங்களில் மக்கள் மீதான அரசாங்கத்தின் ஒடுக்குமுறை அழுத்தம் குறைந்தபட்சமாக இருப்பதை உறுதிசெய்வதில் நாட்டம் காட்டினார்.

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தத்தைச் செய்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்த கட்டத்திலும் சரி, போரின் முடிவுக்குப் பின்னரான நல்லாட்சி காலகட்டத்திலும் சரி, விக்கிரமசிங்க ஒரு மென்மையான அணுகுமுறையுடனேயே ஆட்சி செய்தார். அதனால் மிதவாதப் போக்குடையதும், கருத்தொருமிப்பின் அடிப்படையிலானதுமான அரசியலில் நம்பிக்கைகொண்ட இன, மத சிறுபான்மையினங்களினதும் சிவில் சமூகத்தினதும் நம்பிக்கையை அவரால் பெறக்கூடியதாக இருந்தது.

விக்கிரமசிங்கவிலும், அவரால் சமூகத்துக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய பங்களிப்பிலும் நம்பிக்கை கொண்டவர்கள் அவரை இலங்கை ஒருபோதும் கொண்டிராத சிறந்த ஜனாதிபதியாக விளங்குவார் என்று கூறினார்கள். இனவெறியும், போலி வாக்குறுதிகளும் முன்னரங்கத்தை ஆக்கிரமித்திருக்கின்ற இலங்கை ஜனநாயகத்தை விடவும் மேற்குலக ஜனநாயக நாடொன்றுக்கே அவர் கூடுதலானளவுக்கு பொருத்தமுடையவர் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். "முறைமை மாற்றத்துக்கான" வெகுஜனக் கோரிக்கைக்கு வழிவகுத்த சுயநல சக்திகளின் கைதியாக விக்கிரமசிங்க இருக்கிறார் என்பதை அவர்கள் நம்பத் தயாராக இல்லை.

தாங்கள் நம்புகின்ற விக்கிரமசிங்க தற்போதைய ஊழல், தவறான நிர்வாகம் மற்றும் அடாடவடித்தனம் ஆகியவற்றை வெற்றிகொண்டு வெளிக்கிளம்புவார் என்று இன,மத சிறுபான்மை இனத்தவர்களும், பொதுநலனை மையமாகக்கொண்ட அரசியலில் நம்பிக்கையுடைய பெரும்பான்மையினத்தவர்கள் மத்தியில் உள்ள பிரிவினரும் இன்றும் கூட நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். அவ்வாறு நிகழவேண்டும் என்பது இன்றியமையாததாகும். இல்லாவிட்டால், அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பற்றிய எதிர்பார்ப்புகள் எல்லாம் நழுவிப்போய்விடும்.

## நக்கல் நமசிவாயம்




## இன்றைய நாளில்

★ 1783 – ஜப்பானில் அசாமா எரிமலை வெடித்ததில் 1,400 பேர் உயிரிழந்தனர். பஞ்சம் காரணமாக மேலும் 20,000 இழப்புகள் ஏற்பட்டன.

★ 1948 – இலங்கையில் மலையகத் தமிழரை நாடற்றவர்களாக்கும் குடியுரிமைச் சட்டத்தை பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தினார்.

★ 1965 – நியூசிலாந்தினுள் குக் தீவுகள் சுயாட்சியுடன் கூடிய அதிகாரத்தைப் பெற்றது.

★ 1972 – உகாண்டாவின் இராணுவத் தலைவர் இடி அமீன் அங்கு வாழும் ஆசிய நாட்டவர்கள் அனைவரையும் 90 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற ஆணையிட்டார்.

★ 1972 – சிம்லா ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

★ 1977 – அ.அமிர்தலிங்கம் இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ 1984 – மேல் வோல்ட்டா நாடு புர்கினா பாசோ எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1987 – விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், யாழ்ப்பாணம் சுதுமலையில் முதன்முதலில் மக்கள் முன் தோன்றி உரையாற்றினார்.

★ 1998 – இலங்கை முழுவதும் அவசரகாலச் சட்டத்தை அரசுத்தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அறிவித்தார்.

★ 2006 – திருகோணமலை நிவாரணப் பணியாளர்கள் படுகொலை: வறுமைக்கு எதிரான அமைப்பு என்ற பிரெஞ்சு அரச சார்பற்ற அமைப்பின் 17 தமிழ்ப் பணியாளர்கள் மூதூரில் இலங்கை இராணுவத்தினரால் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டனர்.

★ 2006 – ஈழத்துக் கலைஞர் பொன். கணேசமூர்த்தி யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 2007 – நாசாவின் பீனிக்ஸ் விண்கலம் செவ்வாய்க்கோளை நோக்கி ஏவப்பட்டது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 03.08.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 134 4680 | 146 2166 |
| கனேடியன் டொலர் | 164 582 | 177 7632 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 8781 | 44 111 |
| யூரோ | 250 8738 | 265 7124 |
| ஜப்பான் யென் | 1 5570 | 1 67 6 |
| சிங்கப்பூர் டொலர் | 145 8 47 | 157 516 |
| ஸ்ரேலிங் பவுன் | 321 6837 | 34 28 |
| சுவிஸ் பிராங்க் | 260 2 6 | 277 5576 |
| ஐ.அ.டொலர் | 246 1112 | 257 3888 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 2126 |
| குவைட் | குவைட் தினார் | 0,066 46 5 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 3453 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 305 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 563 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1507 |

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜப்பானியத் தூதுவருடன் சந்திப்பு





இலங்கையில் உள்ள ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியை கடந்தவாரம் அமைச்சில் வைத்து சந்தித்தார்.

அமைச்சர் சப்ரி மற்றும் தூதுவர் மிசுகோஷி ஆகியோர் இந்த ஆண்டு 70ஆவது ஆண்டு நிறைவை எட்டிய பன்முக இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடினர்.

ஜப்பானிய அரசாங்கம் சரியான நேரத்தில் வழங்கிய உதவி மற்றும் ஆதரவைப் பாராட்டிய அமைச்சர், தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் சவால்களைத் தணிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்து தூதுவருக்கு விளக்கினார்.

இந்த சந்திப்பின்போது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் ஜப்பான் தூதரக அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் சர்வகட்சி பொது வேலைத்திட்டத்தில் தீர்வு வேண்டும்

## ஜனாதிபதியின் அழைப்புக்கு அமைச்சர் டக்ளஸ் பதில்



தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உட்பட காணிப் பிணக்குகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சர்வகட்சி அரசொன்றுக்கான பொது வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும் - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வகட்சி அரசொன்றை அமைப்பதற்கான பொது வேலைத்திட்டத்திற்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பங்களிப்பை கோரிக்கையாக விடுத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுப்பியுள்ள கடிதத்திற்கு பதிலளித்து, தமிழ் மக்களின் சார்பில் பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எழுதிய பதில் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலும் தெரிவித்திருப்பதாவது,

"நாட்டில் இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்கும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு சவாலான பணியை முன்னெடுக்கவும் அனைத்து அரசியல் கட்சிகள், நிபுணர்கள், சிவில் சமூகங்கள் போன்றவற்றின் பங்கேற்புடன் ஒரு பொது வேலைத்திட்டத்தை செயல்படுத்தும் தங்களின் கடுமையான முயற்சியை பாராட்டுகிறேன்.

எனது கட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி. நாம், 19ஆவது திருத்தம் மற்றும் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவை மீள அறிமுகப்படுத்துவதற்கும் மேலதிகமாக ஒரு பரந்த உரையாடலுக்காக முயற்சிப்பதையிட்டு எமது பாராட்டுகளை தெரிவிப்பதுடன், பின்வரும் 10 அம்சக் கோரிக்கைகளையும் உங்கள் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளுமாறு முன்மொழிகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முன்மொழியப்பட்டுள்ள பத்து அம்சக் கோரிக்கைகள்:

1. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான சட்டம் இயற்றுதல்.

2. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் அரசியலமைப்பு விதிகளை முழுமையாக அமுல்படுத்துவதை மேற்பார்வையிடும் ஒரு குழுவை அமைப்பது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை உறுதிசெய்வதற்குத் தேவையான நிர்வாக மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகளை இந்தக் குழு பரிந்துரைக்க வேண்டும்.

3. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள அல்லது குற்றஞ்சாட்டப்பட்டு நீண்டகாலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல்.

4. வடக்கு மற்றும் கிழக்கில் பாதுகாப்புப் படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகளை விடுவித்தல்.

5. வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்புகள், சாகுபடி செய்யக்கூடிய, மீன்வளர்ப்பு விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய மற்றும் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும் நிலங்களை வன காப்பகங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக நாடளாவிய ரீதியில் பல புகார்கள் உள்ளன. இது வடக்கில் பயிர்ச்செய்கையையும், நன்னீர் மீன்வளர்ப்பையும் தடுத்து சிரமத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, இவ்விவகாரங்கள் தொடர்பாக 2012ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானிகளை மறுபரிசீலனை செய்யவேண்டும்.

6. தொல்லியல் திணைக்களம், தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் விதிகளின்படி, தொல்பொருள் நினைவுச் சின்னங்களாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புகள் எதுவும் வெளியிடப்படாமல், வடக்கு மற்றும் கிழக்கில் தொல்லியல் பெறுமதிமிக்க இடங்களாக ஒதுக்கியுள்ளதாக பல முறைப்பாடுகள் உள்ளன. தொல்பொருள் இடங்களாக முறையாக அறிவிக்கப்படாதபோதிலும், அந்த இடங்களுக்குள் மக்கள் நுழைவதை திணைக்களம் தடுக்கிறது.

தொல்லியல் மற்றும் தொல்பொருள் இடங்களின் நினைவுச்சின்னங்களை அடையாளம் காணும் திணைக்கள அதிகாரிகளின் எந்தவொரு முயற்சியிலும் வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் மதிப்புமிக்க இடங்களாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னர், அப்பகுதி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் இடம்பெறுவதுடன், குறிப்பாக தொடர்புடைய இனக்குழுக்களின் ஆலோசனையையும் பெற வேண்டும்.

7. பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றில் நாட்டின் இன விகிதாசாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதிசெய்வதற்கான திட்டத்தை உருவாக்குதல்.

8. அரச விழாக்களில் இரு மொழிகளிலும் (சிங்களம் மற்றும் தமிழ்) தேசிய கீதத்தைப் பாடுவது.

9. தனிநபர்கள், புலம்பெயர் அமைப்புகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் மீதான தடையை நீக்குதல்.

10. 18 வயதை அடைந்த பின்னர் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வசிப்பவர்கள் மற்றும் வேலைக்காக வெளிநாட்டில் இருப்பவர்கள் பொதுத் தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கும் வகையில் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருதல்.

போன்ற கோரிக்கைகளை முன்மொழிந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதானது உங்களது பொது வேலைத்திட்ட முயற்சிக்கு மேலும் வலுச் சேர்ப்பதாகவும் அமையும் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையே மோதல்

### ஆராச்சிகட்டுவவில் ஊழியருக்கு கத்திக்குத்து

(ஜூட் சமந்த)

ஆராச்சிகட்டுவ பொலிஸ் பிரிவில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரு தரப்பினருக்கிடையே ஏற்பட்ட மோதலில் கத்திக்குத்துக்கு இலக்கான ஊழியர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆராச்சிகட்டுவ, வெலிபெலெஸ்ஸவில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்புவதற்காக நீண்ட வரிசை காணப்பட்ட நிலையில் இரு குழுக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அந்தக் குழுக்களில் சிலர் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரிடம் வாக்கு வாதப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர் அவர் மீது கத்தியால் குத்தப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கத்திக்குத்து சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியுள்ளதாக தெரிவித்த ஆராச்சிகட்டுவ பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிபொருள் பெற வரிசையில் காத்திருந்தவர் உயிரிழப்பு

### புத்தளத்தில் சோகம்

(ஜூட் சமந்த)

புத்தளத்தில் எரிபொருள் பெற்றுக்கொள் வதற்காக காத்திருந்த ஒருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

புத்தளம் நகரத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் லொறியொன்றுக்கு டீசல் பெற்றுக்கொள்ள காத்திருந்தவரே மரணமாகி யுள்ளார்.

வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறி நகராததையடுத்து, அருகில் இருந்தவர்கள் சென்று பார்த்தபோது சாரதி உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். அவரை உடனடியாக புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்க பொதுமக்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புத்தளத்தைச் சேர்ந்த அப்துல் காசிம் மொஹமட் நியாஸ் என்ற 63 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வெள்ளவத்தை காப்பகத்திலிருந்து சிறுமி மாயமாகியுள்ளதாக முறைப்பாடு

வெள்ளவத்தை, டபிள்யூ.ஏ.டி.சில்வா மாவத்தையிலுள்ள சிறுவர் காப்பகத்திலிருந்த சிறுமியொருவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறுமி நேற்று முன்தினம் (02) அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதேவேளை, மூன்று நாட்களுக்கு முன்னர் ரன்முத்துகல சிறுவர் காப்பகத்திலிருந்து வெள்ளவத்தை சிறுவர் காப்பகத்துக்கு அழைத்து வரப்பட்டவர் என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. மஹகம, தியகடுவ பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுமியே இவ்வாறு காப்பகத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுவரெலியாவில் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு பெரண்டினா நிறுவனத்தின்மூலம் கொடுப்பனவுகள் வழங்கல்








(நுவரெலியா நிருபர்)

நுவரெலியா மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப பெரண்டினா நிறுவனத்தின்மூலம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக 08 கோடியே 72இலட்சத்து 80ஆயிரம் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. நுவரெலியா மற்றும் அம்பேகமுவ பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்த தொகை வழங்கப்படவுள்ளது.

இந்நிறுவனத்தின் ஊடாக ஆயிரம் குடும்பங்களுக்கு 5ஆயிரம் ரூபா வீதம் மூன்று மாதங்களுக்கும் சுயதொழிலுக்காக 18ஆயிரத்து 70பேருக்கு 4ஆயிரம் ரூபா வீதமும் வழங்கி வைக்கும் திட்டம் கடந்த 1ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வருமானம் குறைந்த ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் மூன்று மாதங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நுவரெலியா மாவட்ட செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 250பேருக்கான கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் நுவரெலியா பிரதேச செயலாளர் விதுர சம்பத், பெரண்டினா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜகத் கொடகந்த, பிரதி பொது முகாமையாளர் ரஹீம் உட்பட பெரண்டினா நிறுவனத்தின் உறுப்பினர்களும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பெரண்டினா நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் ரஹீம், தற்பொழுது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் பெரும் பொருளாதார பின்னடைவை சந்தித்து வருகின்றனர். எனவே, அவர்களின் பொருளாதார தேவைகளை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்யக் கூடியவகையில் எமது நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட நுவரெலியா மற்றும் அம்பேகமுவ பகுதிகளைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா வீதம் மூன்று மாதங்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு முதற்கட்டமாக 250 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஏனைய 750 பேருக்கும் எமது நிறுவனத்தின் பணியாளர்களால் அவர்களுக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது. எங்களுடைய பணியாளர்கள் தெரிவு செய்துள்ள பயனாளிகளை மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், கிராம சேவகர்கள் உறுதிப்படுத்திய பின்பே அவர்கள் இந்த திட்டத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள். இந்த திட்டத்தின் ஆரம்ப கட்டமாகவே குறித்த கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்படுகின்றன. இதனைத்தவிர, தெரிவு செய்யப்பட்ட 18ஆயிரத்து 70பேருக்கு 4ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த தொகையும் மிக விரைவில் வழங்கப்படவுள்ளதுடன் இவை விசேடமாக வருமானம் குறைந்தவர்களுக்கே வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, இன்னும் பல வேலைத்திட்டங்களை நுவரெலியா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறுபவர்களை மையப்படுத்தி செயற்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள்

සමස්ත ලංකා ජම්ඉයියතුල් උලමා
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா
ALL CEYLON JAMIYYATHUL ULAMA
جمعية علماء سريلانكا
(Incorporated by Act of Parliament No.51 of 2000)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வருமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் உலமாசபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக நாட்டின் பல பகுதிகள் வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே. இவ்வாறான நிலையில் எம்மால் முடியுமான உதவிகளை பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு வழங்குவது அல்லாஹ்வின் பொருத்தமும், உதவியும் எமக்குக் கிடைப்பதற்கும், ஆபத்துகளிலிருந்து பாதுகாப்புப் பெறவும் காரணமாக அமைகின்றன.

ஆதலால், சிறப்பான இம்முஹர்ரம் மாதத்தில் வசதி படைத்தோர் மற்றும் பாதிக்கப்படாத பிரதேசங்களில் உள்ளவர்கள் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு அப்பிரதேசங்களில் உள்ள ஜம்இய்யாவின் பிரதேசக் கிளைகள் மற்றும் மஸ்ஜித் நிர்வாகங்கள் ஊடாக தங்களது உதவிகளை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா அனைவரையும் வேண்டிக் கொள்கின்றது.

அத்துடன், தங்களது உதவிகளை பணரீதியாக மேற்கொள்ள விரும்புபவர்கள் கொழும்பு மாவட்ட மஸ்ஜித்கள் சம்மேளனம் அல்லது கண்டி மாவட்ட மஸ்ஜித்கள் சம்மேளனம் மற்றும் ஜம்இய்யாவின் கண்டி மாவட்டக் கிளை ஆகியவற்றைத் தொடர்பு கொண்டு அப்பிரதேசங்களுக்கு உதவிகளை வழங்குமாறு ஜம்இய்யத்துல் உலமா வேண்டிக் கொள்கின்றது.

மேலதிக தகவல்களுக்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் சமூக சேவைப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர் அஷ்-ஷைக் எம்.எச்.எம்.பவாஸ் (0777-571876) உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சீரற்ற காலநிலையினால் பிரதான வீதிகளில் மண்சரிவு

## ★ நிலம் தாழிறக்கம் ★ போக்குவரத்து ஸ்தம்பிதம்

## மாற்றுவழியை பயன்படுத்தவும் ஒருவழி போக்குவரத்துக்கும் ஏற்பாடு



ஹட்டன் காமினி புர பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (மனுர சுதத்செல்லஹேவா)

### தியகல - நோட்டன் வீதியில்...



(கினிகத்தேனை நிருபர்)


சீரற்ற காலநிலை காரணமாக தியகல - நோட்டன் வீதியில் போக்குவரத்து தடைபட்டிருந்தது. இதனால் மஸ்கெலியா, கலவெல்தெனிய, நோட்டன் போன்ற பகுதிகளுக்கு செல்லும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குட்பட்டிருந்தனர்.



(மனுர சுதத்செல்லஹேவா)

மழை காரணமாக ஹட்டன் - சமனல பகுதியில் மண்மேடு ஒன்று சரிந்து குடியிருப்பு கட்டிடம் மீது விழுந்துள்ளதை காணலாம்.

### கினிகத்தேனை - நாவலப்பட்டி வீதியில்...



கினிகத்தேனை - நாவலப்பிட்டி பிரதான பாதையில் கெனில்வேர்த் 04ஆம் பிரிவு தோட்டத்துக்கு அருகில் நேற்று(03) அதிகாலை பாரிய மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக வாகன போக்குவரத்துகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது. மண் திட்டை அகற்றும் பணிகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.

### மஸ்கெலியா - நல்லதண்ணி வீதியில்...



(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா – நல்லதண்ணி பிரதான வீதியில் நேற்று(03) காலை 8மணியளவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் நல்லதண்ணி - மஸ்கெலியா வீதியிலான போக்குவரத்து தடைப்பட்டது.

இது மறே, நல்லதண்ணி பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியாகும். மேலும் நேற்றுமுன்தினம் காலை 8மணி முதல் நேற்றுக் காலை 8மணி வரையான காலப்பகுதியில் 88.1மி.மீற்றர் மழை பெய்துள்ளது.

### இரத்தினபுரி – வெவல்வத்தை வீதியில்...



(பலாங்கொடை நிருபர்)

மழை காரணமாக இரத்தினபுரி - வெவல்வத்தை பிரதான வீதியில் கடந்த 1ஆம் திகதி காலை 11 மணியளவில் பாரிய மண்மேடு ஒன்று சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் இவ்வீதியினூடான போக்குவரத்து மறுநாள்வரை பாதிக்கப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்கு இரத்தினபுரி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன் மேலதிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

### மஸ்கெலியா - நோட்டன் வீதி தாழிறக்கம்...



(மஸ்கெலியா நிருபர்)

நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியிலுள்ள 5ஆம் கட்டை பகுதியில் நேற்று(03) அதிகாலை 3 மணியளவில் சுமார் 20அடிக்கு மேற்பட்ட பிரதான வீதி தாழிறங்கியுள்ளது.

இந்த வீதி தாழிறங்கியதால் அவ்வீதியூடாக சேவையில் ஈடுபட்டு வந்த பஸ்கள் அவிசாவளை, நோட்டன் வரை சேவையில் ஈடுபட்டுவரும் நிலை தோன்றியுள்ளது. அதேபோல் தெரணியகலை, மஸ்கெலியா பஸ்சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

### நுவரெலியா – தலவாக்கலை வீதியில்...



(செ.திவாகரன்)

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - தலவாக்கலை A7 பிரதான வீதியில் நேற்றுக்(03) காலை நானுஓயா பிலக்பூல் சந்தியில் மண்சரிவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, நுவரெலியா – மீபிலிமான, நுவரெலியா – தலவாக்கலை, நுவரெலியா – ஹட்டன், நுவரெலியா – டயகம போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

## வல்வைப்படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல்





(யாழ். நிருபர்)

வல்வைப்படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் வல்வெட்டித்துறை றேவடி கடற்கரைப்பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் நேற்றுமுன்தினம் (02) அனுஷ்டிக்கப்பட்டது. அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு படுகொலையானவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்திய இராணுவத்தினரால் 1989 ஓகஸ்ட் மாதம் 02ஆம் திகதி வல்வெட்டித்துறையில் 63 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அது வல்வைப் படுகொலை எனப்படுகிறது.

## யாழ். போதனாவுக்கு மருந்துப்பொருட்கள் நன்கொடை



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்குத் தேவையான பல மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப்பொருட்கள் எஸ்.கே.நாதன் அறக் கட்டளையினால் நேற்று முன்தினம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் எஸ்.கே.நாதன் அறக் கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் சுப்பிரமணியம் கதிர்காமநாதனால் மருந்துப் பொருட்கள் வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் வைபவ ரீதியாக கையளிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மருந்தாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

## நீந்திச்சென்று தமிழக கரையை அடைந்த மீனவர்கள்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்கள் தமது படகு கவிழ்ந்ததினால் நீந்திச்சென்று தமிழக கரையோரத்தை அடைந்துள்ளனர்.

பருத்தித்துறை இன்பசிட்டி பகுதியைச் சேர்ந்த ஜனார்த்தனன் மற்றும் பலாலியைச் சேர்ந்த ஜெசிகரன் ஆகிய இருவரே சென்றுள்ளனர். விசாரணைகளின்போது, தாம் கடந்த 31ஆம் திகதி மாலை பருத்தித்துறை பகுதியிலிருந்து மீன்பிடிக்க புறப்பட்டதாகவும் தமது படகு கடல் சீற்றம் காரணமாக கவிழ்ந்ததால் இருவரும் நீந்தி தமிழக கரையோரத்தை அடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இருவர் தொடர்பிலும் தமிழக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சக மாணவிக்கு வீடமைத்து கொடுத்த மாணவர்கள்



(சாவகச்சேரி நிருபர்)

யாழ்.நாவற்குழி மகாவித்தியாலயத்தில் 1997ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயின்ற மாணவர்கள் தமது சக மாணவி ஒருவருக்கு வீடமைத்து அதனை கடந்த 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கையளித்துள்ளனர்.

மறவன்புலவு மத்திய பகுதியைச் சேர்ந்த பாடசாலை தோழி ஒருவருக்கே இவ்வாறு வீடமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் நிமலரோகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விருந்தினர்களாக நாவற்குழி மகாவித்தியாலய முதல்வர் சிவானந்தன், முன்னாள் அதிபர் பவளகுமாரன், வீடமைப்பிற்கு நிதி பங்களிப்பாற்றிய புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த சக மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

## முசலி, கஜிவத்தையிலுள்ள புனித அந்தோனியார் சிற்றாலயத்தின் திருச்சொரூபங்கள் இரண்டு உடைப்பு

(மன்னார் நகர் நிருபர்)



முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்திலுள்ள தூய அந்தோனியார் திருச் சொரூபங்கள் இரண்டு இனந்தெரியாத நபர்களினால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப் பட்டுள்ளதாக கொக்குப் படையான் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கொக்குப்படையான் கிராம மக்கள் கஜிவத்தை பகுதியில் பல வருடங்களாக காணப்பட்ட புனித அந்தோனியார் சிற்றாலயத்தில் நேற்று முன்தினம் (02) மாலை ஆராதனைகளை மேற்கொள்ள சென்றிருந்தனர்.

இதன்போது குறித்த சிற்றாலயத்தில் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த சுமார் 1 மற்றும் 3 அடி உயரம் கொண்ட அந்தோனியார் திருச்சொரூபம் உடைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.குறித்த சம்பவம் தொடர்பாக உடனடியாக சிலாவத்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக கொக்குப்படையான் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

## நல்லூர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு யாழ்ப்பாணப் பொலிஸாரின் விசேட அறிவிப்பு

(யாழ். நிருபர்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

வழமையாக நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின்போது பெருமளவில் பக்தர்கள் ஒன்றுகூடுவது வழமை. எனவே, நல்லூர் ஆலய வளாகத்தில் திருடர்கள் தமது கைவரிசையினை காட்டக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

அதனை தடுக்கக்கூடியவாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின்கீழ் விசேட பொலிஸ் அணிகள் சிவில் மற்றும் சீருடையில் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் முருகனை தரிசிக்க வரும் பக்தர்கள் பெறுமதியான நகைகளை அணிந்து வருவதை தவிர்ப்பதோடு, அதிகளவில் பணத்தினை ஆலயத்திற்கு எடுத்து வருவதை தவிர்க்குமாறும், ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தமது வீடுகளை சரியாக பூட்டி வீட்டின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி ஆலயத்திற்கு வரும்பட்சத்தில் திருட்டுச் சம்பவங்களிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றும் யாழ்ப்பாணப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# பொருளாதாரத்தை மேம்படுத்த விசேட திட்டங்கள்...

**9ஆவது நாடாளுமன்றத்தில் 3ஆவது கூட்டத்தொடரை நேற்று வைபவரீதியாக ஆரம்பித்துவைத்து ஆற்றிய அக்கிராசன உரையிலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொருளாதாரத்தை மேம்படுத்த விசேட வேலைத்திட்டங்கள் என்பதை அறிவித்தார்.**

**அவரின் முழு உரையும் வருமாறு;**

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட நபர் என்ற வகையில் நான் கடந்த 20ஆம் திகதி ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன். இன்று (நேற்று) ஜனாதிபதியாக நான் முதல் முறையாக உரையாற்றுகின்றேன்.

இச்சபையை இலங்கையின் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் மற்றும் ஏனைய இனத்தவர்கள் என யாராக இருந்தாலும் நீங்கள் இந்த இடத்தில் இலங்கை நாடாளுமன்றம் என்ற ரீதியிலேயே ஒன்றுகூடுகின்றீர்கள். எமது நாட்டில் வாழ்கின்ற மக்களும் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அவ்வாறு எந்த இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ரீதியிலேயே செயற்படுகின்றோம். நான் உங்கள் முன் அனைத்து இலங்கையர்களினதும் ஜனாதிபதியாகவே உரையாற்றுகின்றேன்.

எமது நாடு, பல்வேறு கலாசாரங்களைக்கொண்டுள்ள, பல்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்களைக்கொண்டுள்ளது. கலாசார விழுமியங்களைப் பேணி வருவதற்கும் சமயங்களைப் பின்பற்றுவதற்கும் மற்றும் தமது தாய் மொழியை பயன்படுத்துவதற்கும் அனைவருக்கும் உள்ள உரிமையை ஜனாதிபதி என்றவகையில் நான் பாதுகாப்பேன். அவ்வாறே அரசியலமைப்பின் பிரகாரம் பௌத்த சமயத்துக்கு முன்னுரிமையளித்து, பௌத்த சமயத்தைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும் அனைத்து சமயங்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

எமக்கு சமய, கலாசார, சமூக ரீதியாக மாத்திரமன்றி, பொருளாதார ரீதியாகவும் சிறந்தவொரு பாரம்பரியம் உரித்தாக உள்ளது. அது பல்வேறு கலாசாரங்களினால் வளர்ந்துள்ளது. இவ்வாறான பாரம்பரிய மரபுரிமைகளை அடிப்படையாகக்கொண்டு எதிர்காலத்தைக் கட்டி யெழுப்பும் பொறுப்பு இன்று எம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. நான் கஷ்டத்தில் விழுந்திருந்த ஒரு நாட்டையே பொறுப்பேற்றேன். கடுமையான பொருளாதாரப் பிரச்சினை ஒருபுறமிருக்க, பாரிய மக்கள் எதிர்ப்பு மறுபுறமிருந்தது. எனினும், நாட்டுக்காக இந்த கடினமான சவாலை பொறுப்பேற்க நான் தீர்மானித்தேன். இருளுக்கு சாபமிட்டுக்கொண்டு இருப்பதைவிட ஒரு விளக்கையேனும் ஏற்றுவது நாட்டுக்காக நான் செய்யும் கடமை எனக் கருதியதே அதற்குக் காரணம். இன்று நாம் நவீன வரலாற்றில், ஒருபோதும் எமது நாடு முகங்கொடுத்திராத கடுமையான பிரச்சினையொன்றுக்கு முகங்கொடுத்துள்ளோம். நாம் பாரிய அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளோம். அதிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து சவாலை வெற்றிகொண்டால் மாத்திரமே முடியும்.

இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களும் நாட்டு மக்கள் அனைவரும் நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு தத்தமது சக்திக்குட்பட்டவாறு பங்களிப்புச் செலுத்துவது இன்றியமையாததாகும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயலாற்றவேண்டும் என்பதே இச்சந்தர்ப்பத்தில் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும். ஒன்றிணையும் பட்சத்தில் எம்மால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். பிரிந்து சென்றால் இந்த நாடாளுமன்றத்தில் இருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமன்றி, முழு நாட்டு மக்களும் துன்பத்திற்கும் அழிவிற்கும் ஆளாகுவர்.

எனவே, சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக ஒன்றிணையுமாறு நான் மீண்டும் இந்த நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்துத் தரப்பினரிடம் கோரிக்கை விடுக்கின்றேன். நான் உங்கள் அனைவருக்கும் நட்பின் கரத்தை நீட்ட விரும்புகின்றேன். கடந்த காலத்தைப் பின்தள்ளிவிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணையுமாறு நம்பிக்கையுடன் அழைப்பு விடுக்கின்றேன். சர்வகட்சி அரசாங்கம் பற்றி அரசியல் கட்சிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தையை நான் ஏற்கனவே ஆரம்பித்துள்ளேன்.

எனது வேலைத்திட்டத்தை ஆராய்ந்து, அதன்பின்னர் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இணக்கப்பாட்டைத் தெரிவிப்பதாக சில தரப்பினர் தெரிவித்திருந்தனர். சர்வகட்சி அரசாங்கம் என்பது ஒரு கட்சியின் தனி விருப்பத்திற்கேற்ப செயற்படுகின்ற அரசாங்கமல்ல. அது பொதுக்கொள்கை வட்டத்தினுள் அனைத்துத் தரப்பினரதும் கருத்துகளின் பிரகாரம் பயணிக்கும் அரசாங்கமாகும். எம் அனைவரினதும் கருத்துகளின் பிரகாரம் செயற்படும் அரசாங்கமாகும். நாட்டுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்துச் செல்கின்ற ஓர் அரசாங்கமாகும். விரைவில் இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு ஸ்திரத்தன்மை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்காக சர்வகட்சி அரசாங்கம் ஒன்றின் முக்கியத்துவம் பற்றி நான் இச்சபைக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். பொருளாதாரம் சரிந்து விழுந்ததினால் எமது நாடு பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டது. இவ்வாறு எமது பொருளாதாரம் ஏன் சரிந்து விழுந்தது. எமது பொருளாதார முறைமைகள் எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றி நாம் மூன்று நான்கு தசாப்தங்களாக விவாதித்து வருகின்றோம்.

1977ஆம் ஆண்டு எமது நாட்டுக்கு புதிய பொருளாதார முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், காலத்துக்குப் பொருந்தக்கூடியவாறு அதனை எம்மால் நவீனமயப்படுத்த முடியவில்லை. பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துவதற்கு கவனம் செலுத்தாது போட்டித்தன்மை, தூரநோக்கற்ற அழிவுமிக்க குறுகிய அரசியலில் நாம் ஈடுபட்டோம்.

யுக்ரேன் யுத்தம் மற்றும் கொரோனா தொற்று காரணமாக உலகின் பிரதான பொருளாதாரங்கள் சரிந்து வீழ்தல் உள்ளிட்ட சர்வதேசத்தில் இடம்பெற்ற அனுகூலமான பொருளாதாரக் காரணிகள் எமது நெருக்கடியை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கியது. இந்த அனைத்து காரணிகளினாலும் எமது நாடு பாரிய பாதாளத்திற்குள் தள்ளப்பட்டது.





மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகினர். தற்போது நாம் விழுந்த இடத்திலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சியை ஆரம்பித்துள்ளோம்.

எம்மால், மின்வெட்டைக் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. பயிர்ச்செய்கைக்காக எதிர்காலத்தில் தேவைப்படும் உரத்தைக் கொண்டுவருவதற்கான பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. சமையல் எரிவாயு பிரச்சினை தற்போது முழுமையாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில் உள்ளது. வரிசையில் காத்திருக்காது சமையல் எரிவாயுவை இன்னும் சில தினங்களில் அனைவராலும் பெற்றுக்கொள்ள முடியும். உணவுத் தட்டுப்பாடொன்று ஏற்படாதவாறு அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவுசெய்யும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதித்துறை என்பவற்றிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீளெழும் முயற்சியில் எமது அயல்நாடான இந்தியா வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நான் விசேடமாக இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் எமக்கு வழங்கிய உயிர்மூச்சுக்கு நான் இலங்கை மக்கள் சார்பாக பிரதமர் மோடிக்கும் இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் நன்றியைத்தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எரிபொருள் தட்டுப்பாடே தற்போது எமக்கு முன்னாலுள்ள குறுங்கால பிரச்சினையாக அமைந்துள்ளது. எரிபொருளை கொண்டுவருவதற்காக ஏனைய நாடுகளிடமிருந்து கடன் உதவிகள் கிடைக்கும் வரையில் காத்திருக்கும் முறைமையை நாம் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். எனவே, எமது நாட்டின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று ஊடாக எரிபொருளை கொண்டுவருவதற்கான முறைமை ஒன்றை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். இதன்போது எரிபொருளுக்கான கொடுப்பனவை சமப்படுத்திக்கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட சில இறக்குமதிகளை வரையறுத்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்படும்.

மறுபுறமாக எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்படும். எனவே, இவ்வருட இறுதிவரையில் இந்தக் கஷ்டத்தை நாட்டுக்காக நாம் தாங்கிக்கொள்ளல் வேண்டும்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாம் அனைவரும் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றோம், துன்பப்படுகின்றோம், கஷ்டப்படுகினறோம், சிக்கல்களுக்கு ஆளாகின்றோம். இவ்வாறான கஷ்டங்கள் மற்றும் துன்பங்கள் என்பவற்றிலிருந்து விடுபடுவதற்கான பாதையை நோக்கி இந்நாட்டை கொண்டுசெல்வதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் நான் நடவடிக்கை எடுப்பேன்.

இந்தக் கஷ்டங்களிலிருந்து மீள்வதற்கு நாம் நீண்டகால தீர்வுகளை நோக்கிப் பயணிக்க வேண்டும். மீண்டும் எமது நாட்டில் இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று ஒருபோதும் ஏற்படாதவாறு பலமிக்க அடித்தளமொன்றை ஏற்படுத்த வேண்டும். பொருளாதாரத்தை நவீனமயப்படுத்துதல் வேண்டும். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, போட்டித்தன்மைமிக்க சந்தைப் பொருளாதாரம் ஒன்றை உருவாக்கவேண்டும். அவற்றுக்குத் தேவையான அறிக்கைகள், திட்டமிடல், சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை தற்போது நாம் தயாரித்து வருகின்றோம்.

எங்கள் எதிர்காலத்துக்கு அடிப்படையாகும் திட்டமிடல் சட்டகத்தினுள் நாம் நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இடைக்கால வரவு – செலவுத் திட்டம் மற்றும் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினூடாக முன்வைக்கப்படும்.

மீளெழுச்சிபெறும் ஆரம்பக் கட்டமொன்றாக நாம் சர்வதேச நிதியத்தோடு நான்கு வருட வேலைத்திட்டமொன்று தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பித்தோம். ஓகஸ்ட் மாதத்திலிருந்து நாம் இந்தகங கலந்துரையாடல்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்வோம். ஆரம்பகட்ட உயர்மட்டத்திலான கலந்துரையாடல்களை துரிதமாகவும் சிறப்பான முறையிலும் நிறைவுசெய்வதே எமது எதிர்பார்ப்பாகும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் சட்ட நிபுணர்களான லசாட் மற்றும் கிளிபட் சான்ஸ் நிறுவனங்களோடு சேர்ந்து கடன் நிலைப்படுத்தும் திட்டம் தற்போது முடியுறும் தறுவாய்க்கு வந்துள்ளது. இந்தத் திட்டத்தை இன்னும் சில தினங்களில் நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் முன்வைப்போம். அதன்பின்னர் எமக்கு கடன் உதவிகள் வழங்கியுள்ள நாடுகளோடு கலந்துரையாடுவோம். பின்னர், தனியார் கடனாளிகளோடும் கலந்துரையாடல்களை ஆரம்பித்து, அவர்களுடன் உடன்பாட்டுக்கு வருவோம்.

இறுதியாக ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்து வதற்குத் தேவையான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை தயாரிப்போம். வெளிநாட்டு வர்த்தகமே எமது கடந்த கால பொருளாதார உரிமையாகும். கடந்த காலத்தில் இலங்கையை கடல்மார்க்கப் பாதையில் அமைந்த பிரதான பொருளாதாரக் கேந்திர நிலையமாக இனங்கண்டிருந்தார்கள். இலங்கை ஒருகாலத்தில் கீழைத்தேய தானிய களஞ்சியமாக அறிமுகமானது. இதனால், முழு வலயத்திலும் இருந்த அரிசியை உலகம் பூராகவும் பகிர்ந்தளிக்கும் மத்திய நிலையமாக இலங்கை இருந்தது. அந்தக் கடந்த கால உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதன் மூலம் வலுவான மற்றும் அபிவிருத்தியான பசுமை பொருளாதாரமொன்றை உருவாக்குவதே எமது இறுதி இலக்காக இருந்தது.

காலநிலை மாற்றங்களானது, எதிர்காலத்தில் உலகம் முகங்கொடுக்கும் பாரிய பிரச்சினை என்பதை இனங்கண்டுள்ளோம். காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவான பொருளாதாரமொன்றை நாம் உருவாக்குதல் வேண்டும். மகாபராக்கிரமபாகு அரசர் கூறியதுபோல் வானத்திலிருந்து விழும் ஒரு துளி நீரைக்கூட வீணாகப்போகாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இன்று நாம் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் பிரதிபலனால், இருப்போர் மற்றும் இல்லாதோருக்கு இடையிலான இடைவெளி விரிவடைந்துகொண்டு செல்கின்றது. நடுத்தர வகுப்பினர் சுருங்கிச் செல்கின்றார்கள். மற்றப்பக்கத்தில் தொழில்முயற்சிகள் மற்றும் கைத்தொழில்கள் பாரிய

**(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)**



திகதி 02.08.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4835
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,536,110.00
ஆங்கில எழுத்து Y வெற்றி இலக்கங்கள் 5 3 4 4 1 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 29,226,215.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3077
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,521,700.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 17 27 43 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,649,220.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 865
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,883,640.00
H 02 15 16 81
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,034,793.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 144
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,671,440.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 07 11 29 40
விசேட இலக்கினம் மேஷம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,553,990.40

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1183
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,641,440.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 263,761,070.00
X 21 03 13 27 35
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# சமூக மாற்றங்களுக்கு அர்ப்பணிப்புடனான செயற்பாடு...



(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. தொழில்கள் இல்லாதுபோகின்றது. கடந்த காலங்களில் வெளிநாட்டு ஊழியர்கள் இலங்கைக்கு அனுப்பும் நிதியின் அளவு குறைந்துவிட்டது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. கொரோனா தொற்றுக் காரணமாக பல தொழில்கள் இல்லாதுபோயின. தொழில்களுக்காக வெளிநாடு செல்வோர் குறைந்துள்ளனர். ரூபாவின் பெறுமதியைச் செயற்கையாகக் கட்டுப்படுத்தியதன் காரணமாக வேறு முறைகளின் மூலம் இலங்கைக்கு பணம் அனுப்புதல் மிகவும் இலாபமாக இருந்தது. தற்போது படிப்படியாக இந்நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. வங்கி முறைமையினூடாக இலங்கைக்குப் பணம் அனுப்புதலை ஊக்குவிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். ஓகஸ்ட் மாதத்திலிருந்தே சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகைதருவார்கள். இச்சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் வருவித்துக்கொள்வதற்குத் தேவையான



நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மக்களின் உரிமைகளை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அரச உரிமைப்பத்திரதாரிகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்குவோம். அரச மாடிவீடுகளில் வசிப்போருக்கு வீட்டு உரிமைகளை வழங்குவோம். பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். பொருளாதாரத்தை நிலைபேறுடையதாக்கும் முயற்சியின் போது சமூகத்தின் வலுவற்ற மற்றும் நிர்க்கதியானோர் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்துவோம். நாட்டின் தொழில்முயற்சியாளர்களுக்குத் தங்களது ஆற்றல்களினூடாக முன்வருவதற்குத் தேவையான வழிகளை மேலும் விரிவுபடுத்துவதோடு சமூகத்தில் கீழ்மட்டத்தில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுப்போம்.

நாடுபூராகவும் வசிக்கும் ஏழை மக்களுக்கு குறுகியகால நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்போம். அதேபோன்று அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு நீண்டகால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். நான் சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்போடு செயற்படுவேன். நான் எதிர்காலத்திற்காக மேற்கொள்ளவேண்டிய நேர்மறையான சமூக மாற்றங்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். மீண்டும் விரிவான நடுத்தர வர்க்கத்தினரை உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படையை உருவாக்குவேன். சமூக சந்தைப் பொருளாதாரம் ஒன்றின் ஊடாக நன்மைகளை முழு சமூகத்திற்கும் நியாயமானவாறு பெற்றுக்கொடுப்பேன்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் செயற்பாடுகளுக்காக சமூக நியாயாதிக்க ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

தற்போது, நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் அரச தொழில்முயற்சிகள் தொடர்பில் பொருளாதார எண்ணக்கருவொன்று இருந்தது. ஆனாலும் அது தோல்வியான மற்றும் வினைத்திறனற்றது என்பதை தற்போது முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. சோஷலிச நாடுகளான சீனா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளும் தற்போது அரச தொழில்முயற்சிகளை செயற்படுத்துவதில்லை. நாம் மேலும் பண்டைய எண்ணக்கருக்களில் தங்கியிருந்தால் எமது நாடு மேலும் கீழ்நோக்கிச் செல்வதை தடுப்பதற்கு யாராலும் முடியாது. எனவே, இவ்வாறு நட்டமடையும் அரச முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது எவ்வாறு என்பது பற்றி எமக்கு கொள்கைரீதியான தீர்மானங்களை எடுக்கவேண்டிவரும்.

உலகத்தில் பொருளாதார வல்லமை கொண்ட நாடுகளாக மேற்குலக நாடுகளே இருந்தன. ஆனாலும் 21ஆம் நூற்றாண்டு முடிவடைவதற்கு முன்னதாக உலகத்தில் வலுவான பொருளாதாரம் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு உரித்தாகும். அவ்வாறான பின்புலத்தில் எமது நாட்டின் புவிசார் அமைவு மிகவும் முக்கியமானதாகும். நாம் இந்த இலாபகரமான அமைவின் உச்சப் பயனை பெற்றுக்கொள்ள வேண்டும். இதனை மனதில் நிறுத்திக்கொண்டு எமது எதிர்கால நிறுவன சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தல் வேண்டும். தினந்தோறும் கடன் பெற்றுக்கொள்வதன் மூலம் நாட்டை முன்கொண்டுசெல்ல எம்மால் முடியாது. கடன் பெறுவதை இயன்றளவு குறைத்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே, இந்து சமுத்திர கேந்திரீய புதிய பொருளாதார வலுவினால் எமது நாட்டுக்கு உச்சபட்ச பயனை பெற்றுக்கொள்ளக்கூடிய சட்டதிட்டங்கள் மற்றும் கொள்கைகளை நான் உங்களோடு சேர்ந்து வகுப்பேன்.

இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பாடுபடும்போது சம்பிரதாய சிந்தனையிலிருந்து விடுபடுமாறு சகல தரப்பினரிடமும் நான் கோரிக்கை விடுக்கின்றேன். அதிக வட்டிக்கு வர்த்தகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும்போது, வெறுமனே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த சில குழுக்கள் நாட்டுக்கு பொருத்தமான முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

பொய்யான பிரசாரங்களை உருவாக்கி மக்களை திசைதிருப்புகின்றார்கள். யாரேனும் சொல்வதை ஆராய்ந்து பார்க்காமல் ஏற்றுக்கொண்டு வெளிநாட்டு முதலீடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதனால் எமது நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பை அளவிட முடியாது. ஊழல் மற்றும் மோசடி ஊடாக நாட்டின் நிதி மற்றும் வளங்களைக் களவாடியதனால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றி மக்கள் அறிவார்கள். ஆனாலும் பொய்ப் பிரசாரங்களை எடுத்துக்காட்டி வெளிநாட்டு முதலீடுகளைத் தடைசெய்து நாட்டுக்கு ஏற்படுத்திய இழப்பு கணக்கிட முடியாத அளவுக்கு விசாலமானதாகும்.

அதற்கு பல உதாரணங்களும் இருக்கின்றன. இந்தியாவோடு ஒன்றிணைந்து திருகோணமலை எண்ணெய்த்தாங்கித் தொகுதியை அபிவிருத்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, இந்தியாவுக்கு இலங்கையை விற்கின்றார்கள் எனக் கூறி அபிவிருத்தித் திட்டத்துக்கு இடையூறு விளைவித்தனர். அன்று எமக்கு எண்ணெய்த்தாங்கித் தொகுதியை அபிவிருத்தி செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பின் இன்று மக்களுக்கு எரிபொருள் வரிசைகளில் நீண்டநாட்கள் அலைவதற்கு அவசியம் ஏற்பட்டிருக்காது.

சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவையை ஆரம்பிக்கும்போது, அதேபோன்று எதிர்ப்புகளைச் செய்தார்கள். சுவசெரிய அம்பியூலன்ஸ்கள் வைத்தியசாலைகளுக்கு வந்தால் ஏற்படுவது மரணம் எனக்கூறி சில வைத்தியர்கள் ஊடகச் சந்திப்புகளை நடத்தினர். ஆனாலும் நாம் எவ்வாறாயினும் சுவசெரியவை ஆரம்பித்ததனால், தற்போது பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.



இவ்வாறு குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்களை வழிதவறி நடத்தி தடைசெய்த கருத்திட்டங்கள் காரணமாக எமது பொருளாதாரக் கட்டமைப்பு அழிவடைந்தது.

இலகு புகையிரதச் சேவையைத் ஸ்தாபிப்பதற்கும் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் ஜப்பான் நாடு முன்வந்த சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக அடிப்படையற்ற வீணான காரணிகள் பலவற்றை எடுத்துக்காட்டியதன் காரணமாக, எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கிருந்த 3 பில்லியன் டொலருக்கு அதிகமான தொகை கிடைக்காமல் போனது. அதுமாத்திரமன்றி, ஜப்பான் மற்றும் இலங்கைக்கிடையே இருந்த நீண்டகால நட்பு சிதறிப்போனது. இலங்கையின் உற்ற நண்பனான முன்னாள் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவே இத்திட்டங்களை எமக்குப் பெற்றுத்தருவதற்கு தலைமை தாங்கினார். அவர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டார். எமது சமய நம்பிக்கைப்படி நான் அபேவின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க விரும்புகின்றேன்.



அபிவிருத்தி பொருளாதாரம் ஒன்றினை நோக்கி நாம் பயணிக்கும் பாதையை மிகவும் பலப்படுத்திக்கொள்வதற்காக கடந்த காலத்தை பற்றி திரும்பிப் பார்க்க வேண்டும். எமது பொருளாதாரம் இந்தளவு வீழ்ச்சியடைவதற்குக் காரணம் என்ன? எதிர்மறையான பிரதிபலன்கள் எம்மை ஏன் வந்தடைந்தன? தனிநபர்கள் செய்த தவறுகள் மூலமா அல்லது கொள்கை ரீதியான குறைபாடுகள் காரணமாகவா? ஒவ்வொரு நபரும் நாம் விரும்பியவாறு பொருளாதாரத்தை வழிநடத்த எவ்வாறு வாய்ப்பு ஏற்பட்டது? நபருக்கு நபர் நாட்டின் பொருளாதாரக் கொள்கை மாற்றமடையலாமா? காலத்திற்கு காலம் அவ்வாறு கொள்கைகளை மாற்றுவது நாட்டுக்கு பயன்மிக்கதா அல்லது பயனற்றதா? இதுபற்றி நாம் ஆழமாக தேடிப் பார்த்தோம். இதற்குத் தீர்வாக எதிர்வரும் 25 வருடங்களுக்கு நாங்கள் தேசிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை தயாரிக்கவுள்ளோம். வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுகின்ற குழுக்களை கவனித்து தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து உருவாக்குகின்ற சமூக சந்தைப் பொருளாதார முறைமைக்குத் தேவையான அடித்தளத்தை உருவாக்குவேன்.

2025ஆம் ஆண்டளவில் ஆரம்பநிலை வரவு- செலவுத் திட்டத்தில் மிகை ஒன்றை ஏற்படுத்துவதே எமது முயற்சியாகும். பொருளாதார அபிவிருத்தி வேகத்தை நிலையான தன்மைக்கு உயர்த்துவதும் எமது முயற்சியாகும். 2026ஆம் ஆண்டாகும்போது நிலையான பொருளாதார அடிப்படை ஒன்றை உருவாக்கிக்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும். தற்போது அரச கடன் அளவானது மொத்த தேசிய உற்பத்தியின் நூற்றுக்கு 140 சதவீமாகும். இதனை 2032ஆம் ஆண்டளவில் மொத்தத் தேசிய உற்பத்தியில் நூறு சதவீதத்தை விடவும் குறைப்பது எமது திட்டமாகும்.

அவ்வாறு தேசிய பொருளாதாரக் கொள்கையினூடாக நாட்டையும் நாட்டு மக்களையும் கட்டியெழுப்பும் செயற்பாட்டை முன்னெடுத்துச் சென்றால், 2048ஆம் ஆண்டில் சுதந்திர தின நூற்றாண்டைக் கொண்டாடும்போது, முழுமையான அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக எம்மால் மாறமுடியும். நான் இவ்வாறான நீண்டகால இலக்குகளுக்கான திட்டங்களைத் தயாரிக்கும்போது சிலர் கேலிக்கதைகள் சொல்கின்றனர். ஆம். நான் ஏனைய அரசியல்வாதிகள் போன்றவர் அல்ல. என்னிடம் இருப்பது நீண்டகாலத் திட்டங்கள். நான் திட்டமிடுவது எனது முன்னேற்றத்துக்காக அல்ல. இளைஞர் சமுதாயத்துக்காகவும் நாளைய நாளுக்காகவுமே செயற்படுகின்றேன். நான் இன்று நடும் மரத்தின் அறுவடையை எனக்கு அனுபவிக்கக் கிடைக்காது என்பதை நான் நன்றாக அறிவேன். ஆனாலும் நாளைய தினம் எமது பிள்ளைகளான எதிர்காலப் பரம்பரைகள் அந்த அறுவடையை அனுபவிப்பார்கள்.

எமது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியற்ற தன்மை காரணமாக எமக்கு சர்வதேச மட்டத்தில் அதிகளவிலான இழப்பீடுகள் மற்றும் பின்னடைவுகள் ஏற்பட்டன. நான் இந்த நிலைமையை மாற்றுவேன். உலகத்தில் சகல நாடுகளும் எமது நண்பர்கள். எமக்கு எதிராளிகள் இல்லை. நாம் எந்தவொரு கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்லர். சகல நாடுகளோடும் நட்புரீதியான கொள்கையைப் பின்பற்றுவதை நான் உறுதிப்படுத்துகின்றேன். சுபீட்சமான இலங்கை ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக பொருளாதார மேம்படுத்தலுக்கு சமாந்திரமாக சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகள் பலவற்றைச் செய்யவேண்டுமென நான் இதற்கு முன்பும் வலியுறுத்தியுள்ளேன்.

எமது நாட்டின் மக்களும் பாரிய அரசியல் மறுசீரமைப்புச் செயற்பாடொன்றை எதிர்பார்க்கின்றனர். இன்று ஏற்பட்டுள்ளது என்ன? அரசியல் முறைமை மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பான மக்களது நம்பிக்கை இல்லாதுபோய்விட்டது. அரசியல் பொறிமுறை தொடர்பான மக்களது எதிர்பார்ப்புகள் உடைந்துபோயுள்ளன. கடந்த காலம் பூராகவும் எதிர்ப்பில் ஈடுபட்ட மக்கள் இந்த முறைமைத் தொகுப்பின் மாற்றத்தைக் கேட்டு நின்றதும் அதற்காகவே. இலங்கை நாட்டையும் நாட்டு மக்களையும் கட்டியெழுப்புவதற்குத் தேவையான சகல மாற்றங்களையும் செய்வதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். நாடு கேட்கும் சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புகளை நான் நடைமுறைப்படுத்துவேன்.

ஆட்சிமுறைமையில் மாற்றமொன்றை ஏற்படுத்தும் நோக்கில், நாடுபூராக ஆங்காங்கே ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் பிற்காலத்தில் காலிமுகத்திடலில் கேந்திரமானது. நாட்டின் பிரதான நகரங்கள் சிலவற்றுக்கும் அது விரிவடைந்தது. இந்தப் போராட்டமானது மிகவும் அஹிம்சையாகவும் ஆக்கபூர்வமாகவும் இடம்பெற்றது. இப்போராட்டக்காரர்கள் எந்தவொரு வன்முறைகளிலும் ஈடுபடவில்லை. அதன் காரணமாகவே குடும்பம் குடும்பமாக வந்து போராட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர். சிறு குழந்தைகளையும் போராட்ட பூமிக்கு அழைத்து வருவதற்கு பெற்றோர்கள் அச்சம் கொண்டிருக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில் எந்தவிதமான பாதிப்பும் இல்லாதவாறு டிஜிட்டல் முறையில் போராட்டக்காரர்கள், ஜனாதிபதி செயலகத்தின் சுவர்களில் சித்திரம் வரைந்தனர். ஆனால் அதன்பின்னர் இப்போராட்டத்தில் அஹிம்சாவாதம் கீழ்ப்படிந்து வன்முறை மேலெழுந்தது. ஒருசில குழுக்கள் போராட்டத்தின் ஒற்றுமையை மிதித்து போராட்டத்தின் உரிமையாளர்களாக மாறினர். அவர்கள் அன்புக்குப் பதிலாக போராட்டத்தில் வன்முறையை திணித்தனர். நான் ஒருபோதும் வன்முறை மற்றும் பயங்கரவாதத்திற்கு இடமளிக்கமாட்டேன். எனினும், அஹிம்சை மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பேன்.

அமைதியாக போராட்டத்தில் ஈடுபடுவது அடிப்படை உரிமையாகும். அந்த உரிமையை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் இந்தப் போராட்டக்காரர்களை வேட்டையாடப் போவதாக பாரிய பிரசாரத்தை சில குழுக்கள் சமூக ஊடகங்களின் வாயிலாக பரப்ப முயற்சித்து வருகின்றனர். அது உண்மையல்ல. நான் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எந்தவொரு வகையிலும் பாதிப்பை ஏற்படுத்த இடமளிக்கப்போவதில்லை. அமைதியான போராட்டக்காரர்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்காக முன்வருவதற்கும் நான் விசேட செயலணியொன்றை ஸ்தாபிப்பேன்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)



## மட்டக்களப்பு - அம்பாறையில்
# எரிபொருள் திருட்டு சம்பவங்கள் அதிகரிப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் வீதியில் நிறுத்திவைக்கப்படும் வாகனங்களில் இருந்து எரிபொருள் திருடிச்செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால் வாகன சாரதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்போது QR கோட் நடைமுறைக்கு ஏற்ப இங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக பெற்றோல், டீசல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் நீண்டகாலமாக நடமாடும் விற்பனை நிலையங்களை நடத்திவரும் பலர் மீண்டும் தங்களது தொழில்துறையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

நீண்டநேரம் வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெற்றுக்கொண்ட வியாபாரிகள் தங்களது வாகனங்களை வீதியோரங்கள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் நிறுத்திவிட்டு தமது விற்பனை பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செல்லும்போது தருணம் பார்த்து காத்திருக்கும் எரிபொருள் திருடும் திருட்டுக் கும்பல், அவ்வாகனங்களில் இருந்து இலாவகமாக பெற்றோல், டீசல் ஆகியவற்றை திருடிச் செல்கின்றனர். இதனால் வியாபாரிகள் பாதிக்கப்படுவதுடன், மிகுந்த மன உளைச்சலுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறு கல்முனை, நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள கிராமங்களில் அதிகளவிலானோர் தங்கள் எரிபொருளை பறிகொடுத்துள்ளதுடன், வாகனங்களின் பெற்றரி போன்ற உதிரிப்பாகங்களையும் இழந்துள்ளனர்.

தற்போதைய பொருளாதார எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் தங்களது வியாபார நடவடிக்கையை சிரமங்களுக்கு மத்தியில் முன்னெடுத்துவரும் நடமாடும் வியாபாரிகளின் எரிபொருளை திருடும் நபர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முன்வரவேண்டும் என பாதிக்கப்பட்டோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்து காணப்படும் நீரோடையின் பாதுகாப்பு அணை சேதம்
## உரிய அதிகாரிகள் புனரமைத்துத்தர கோரிக்கை




(கல்முனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் 2004ஆம் ஆண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்து காணப்படும் நீரோடைக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அணை மிகவும் மோசமான நிலையில் உடைந்து காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதனால் குறித்த நீரோடைக்கு அருகிலுள்ள நிலப்பகுதி தாழிறங்கி காணப்படுவதுடன், மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அருகிலுள்ள வீதிக்கும் பாதிப்பு ஏற்படும் நிலையை அவதானிக்க முடிகின்றது. மேலும் நீரோடை பகுதியில் கண்டல் தாவரங்கள் வளர்ந்துள்ளதுடன், நீரோடைக்கு அருகில் வெற்று பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளதையும் காண முடிகின்றது.

சுமார் 400க்கும் மேற்பட்ட குடும்பங்கள், கல்முனை கிறீன்ட் பீல்ட் குடியிருப்பு பகுதியில் வசித்துவருவதுடன், அரச காரியாலயத்திற்கு வேலைக்கு செல்வோர், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் எனப் பலரும் நாளாந்தம் குறித்த நீரோடைக்கு அருகிலுள்ள வீதியை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நீரோடையினால் அதிகமாக நீர் செல்லக்கூடிய நிலை உள்ளதுடன், மேலும் நீரோடைக்கு அருகில் உள்ள பாதுகாப்பு அணை மற்றும் வீதி என்பன மேலும் சேதமடையும் வாய்ப்புள்ளது.

இது தொடர்பில் கல்முனை பிரதேச அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் 100 நாட்கள் போராட்டத்தின் 3ஆம் நாள் திருமலையில் முன்னெடுப்பு




(கிண்ணியா நிருபர்)

"வடக்கு - கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் மூன்றாம் நாள் போராட்டம் நேற்று (03) திருகோணமலை மாவட்டத்தில் ஆனந்தபுரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப் போராட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த மக்கள், சிவில் அமைப்பினர், பெண்கள் அமைப்பினர், செயற்பாட்டாளர் என 150இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு, பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டுமெனக்கோரி நடைபவனியாக வருகைதந்து மைதானத்தில் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அத்துடன், அடுத்தகட்ட போராட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றில் இன்று (04) வியாழக்கிழமை காலை 10மணிக்கு நடைபெறவுள்ளது.

# எரிவாயு சிலிண்டர் திருடியவருக்கு ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணை

(கோணாவத்தை நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் எரிவாயு சிலிண்டர் திருடிய நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அட்டாளைச்சேனையிலுள்ள தேநீர் கடையொன்றிலிருந்து இரண்டு எரிவாயு சிலிண்டர்கள் காணாமல் போயுள்ளன. இது தொடர்பாக கடை உரிமையாளர் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (02) ஆஜர்செய்தபோது ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த பேச்சு




(மாவடிப்பள்ளி நிருபர்)

பொத்துவில், அறுகம்பை பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம் தலைமையில் அறுகம்பை சுற்றுலா விடுதியில் அண்மையில் நடைபெற்றது.

நாட்டிற்கு வருமானம் ஈட்டித்தரும் முக்கிய துறையான சுற்றுலாத் துறையினை அறுகம்பே பிரதேசத்தில் எவ்வாறு எதிர்காலங்களில் மேற்கொள்வது குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு, சில உடனடி ஏற்பாடுகள் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. எரிபொருள் தட்டுப்பாட்டையடுத்து இப்பிரதேசத்தில் சுற்றுலாக் கைத்தொழில்துறையினர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பாதுகாப்புப் பிரிவினர், பதவிநிலை பிரமுகர்கள், ஹோட்டல்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள், சுற்றுலாத்துறை பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தென்கிழக்குப் பல்கலை பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக கலாநிதி ஹாறுன் தெரிவு




(கல்முனை நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக இரசாயனவியல் துறையின் தலைவர் கலாநிதி முகம்மட் ஹனிபா ஹாறுன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



2022.08.03ஆம் திகதி, உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில், பிரயோக விஞ்ஞான பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விஷேட ஒன்றுகூடலின்போதே கலாநிதி எம்.எச்.ஹாறுன் தென்கிழக்குப் பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் புதிய பீடாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தில் உல்லாசப்பயணத்துக்கு பெயர் பெற்ற இடமான பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ஹாறுன், தனது ஆரம்பக் கல்வியை பொத்துவில் மகா வித்தியாலயத்திலும் இரண்டாம் நிலைக் கல்வியை கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியிலும் கற்றிருந்தார்.

கலாநிதி ஹாறுன், தனது பல்கலைக்கழகக் கல்வியை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று தேர்ச்சிபெற்று, பின்னர் கலாநிதி பட்டத்தைப் பெறுவதற்கான கல்வியை இலங்கை, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா போன்ற இடங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் கற்றிருந்தார். 2001 டிசம்பர் மாதத்தில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்துகொண்ட ஹாறுன், அவர் சார்ந்த துறையில் பல்வேறு உயர்வுகளைப் பெற்றதுடன் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகத்துறை சார்ந்த பதவிகளையும் வகித்துள்ளார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதான 50பேருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 50 பேரையும் எதிர்வரும் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று (02) உத்தரவிட்டார்.


கடந்த 21.04.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 69 பேரை கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்கல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இதில், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் ஆகியோரது வழக்குகள் நீதவான் நீதிமன்றில் இருந்து உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதுடன், 05பேர் வழக்கிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டதுடன், 16பேர் பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து, 50 பேர் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, பதுளை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று (02) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நாட்டில் பல்வேறு சிறைச்சாலைகளில் உள்ளவர்களை தற்போதைய நாட்டின் எரிபொருள் சூழ்நிலை காரணமாக அழைத்துவரப்பட முடியாத நிலையினை கருத்தில்கொண்டு காணொளி மூலமாக 50 பேரையும் எதிர்வரும் 09ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தை சிவநேசத்துரை காலமானார்





(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனின் தந்தையும், தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும், கோரளைப்பற்று வாழைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான ஆ.சிவநேசதுரை தனது 75ஆவது வயதில் நேற்று (03) காலமானார்.

மட்டக்களப்பு பேத்தாழையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 07 பிள்ளைகளின் தந்தையாவார். தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிக்கு பக்கபலமாக இருந்து கட்சியை கட்டுக்கோப்புடன் உருவாக்கி வளர்த்தெடுத்த பங்கும் இவருக்குண்டு. தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சிரீதியாக கோரளைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்து, 2008ஆம் ஆண்டு முதல் 2012வரையும் பிரதேச சபை உறுப்பினராக இருந்து பல மக்கள் நலன்சார்ந்த வேலைகளை முன்னெடுத்தவர்.

இவர் கோரளைப்பற்று பிரதேசத்தில் உள்ள சமூக நிறுவனங்களிலிருந்து பிரதேசத்திலும், கிராமத்திலும் பல சமூக சேவைகளை 16வயது முதல் முன்னெடுத்தவர். அகில இலங்கை சமாதான நீதவானாக இவர் இருந்து பொதுமக்கள் நலன் சார்ந்த பல வேலைத்திட்டங்களை பிரதேசத்தில் முன்னெடுத்து மக்களின் நன்மதிப்பை பெற்றவர். தமிழீழப் போராட்டத்தில் தமது இரண்டு பிள்ளைகளை எந்தவித எதிர்பார்ப்புமின்றி துணிச்சலுடன் அனுப்பி தமிழீழ போராட்டத்திற்கு வலு சேர்த்த வீரபுருஷராக திகழ்கின்றார்.

# வீட்டின் சுவர் இடிந்து விழுந்து மூன்றரை வயது சிறுமி உயிரிழப்பு
## வாழைச்சேனை புனானை பொத்தனையில் சோகம்

(கல்குடா நிருபர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புனானை பொத்தனை பகுதியில் நேற்று (03) வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீள்குடியேற்றக் கிராமமான புனானை பொத்தனையைச் சேர்ந்த உசனார் பாத்திமா நீமா என்ற மூன்றரை வயதுடைய சிறுமியே வீட்டின் சுவர் விழுந்ததில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

உயிரிழந்த சிறுமியின் வீட்டிற்கு அருகில் வீடு உடைக்கப்பட்டு ஒரு பக்கம் சுவர் மாத்திரம் காணப்பட்ட நிலையில் சீமெந்து கல் சுவர் ஓரத்தில் இருந்து மூன்று சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் தற்போது காற்று பலமாக வீசி வரும் நிலையில், சுவர் திடீரென சரிந்து விழுந்ததில் குறித்த சிறுமி உயிரிழந்துள்ளதுடன், மற்றைய இருவரும் தெய்வாதீனமாக உயிர்த் தப்பியுள்ளனர்.

உயிரிழந்த மூன்றரை வயதுடைய சிறுமியின் சடலம் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதுடன், வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறையில் சமூக சேவைகள், வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு

(நூருள் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸிம்)

சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு அமைப்பின் தலைவர் பொறியியலாளர் ஏ.சி.பஸீல் தலைமையில் சம்மாந்துறையில் அமைந்துள்ள அமைப்பின் தலைமையகத்தில் நேற்று (03) வைபவ ரீதியாக இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.எம்.நௌசாத் கலந்துகொண்டதுடன், கௌரவ அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, உதவிப்பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.வி.சலீம், சமூக சேவை உத்தியோகத்தர், சமாதான கற்கைகள் நிலைய பணிப்பாளர் பேராசிரியர் எஸ்.எல். றியாஸ், கிழக்கு மாகாண கணினி தொழில்நுட்ப பேரவையின் பணிப்பாளர் யூ.எல்.என்.ஹுதா, இளைஞர் சேவை அதிகாரி பைசல் அமீன், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான், அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை தலைவர் எஸ்.எல். ஜலீல் ஜீ உட்பட உலமாக்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், சம்மாந்துறை சமூக சேவைகள் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு ஒன்றிய நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிமிருந்து 150 மில்லி கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் அக்கரைப்பற்று மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம் ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேகநபரை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# சாய்ந்தமருது ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒடுக்கமான பாலம் ஆபத்தான நிலையில்!

*(நூருல் ஹுதா உமர்)*

மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி வீதியிலுள்ள தோணாவுக்கு மேலாக குறுக்காக அமைக்கப்பட்டுள்ள ஒடுக்கமான பாலம் பல தசாப்தங்களாக புனரமைப்பு செய்யப்படாமல் சேதமடைந்த நிலையில் பாவனைக்கு உதவாதவாறு மாறியுள்ளதுடன், அந்தப் பாலத்தில் பயணிப்போர் அச்சத்துடனேயே பயணித்து வருகின்றனர்.



அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சாய்ந்தமருது பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாலத்தின் ஊடாக சாய்ந்தமருது பழைய ஆஸ்பத்திரி உப தபாலகம், கமு/கமு/ றியாலுல் ஜின்னா வித்தியாலயம், தலைவர் அஷ்ரவ் ஞாபகர்த்த பூங்கா, பள்ளிவாசல், பாதுகாப்புப் படைத்தளம், மீனவர்களின் தொழில் நிமிர்த்தமான பயணங்கள் என்பனவற்றுக்கு செல்ல வேண்டும். அபாயகரமான நிலையில் உள்ள இந்த ஒடுக்கமான பாலம் உறுதியான நிலையில் விரிவாக்கப்படல் வேண்டும் என்பது சாய்ந்தமருது மக்களின் விருப்பமாகும்.

தொடர்ந்தும் இப்பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு வருகின்ற மக்கள் பிரதிநிதிகள் இப்பிரச்சினைக்கு தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் மேடைகளில் வாக்குறுதி வழங்கினாலும் கூட அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் பலரும் பல்வேறு காரணங்களை கூறிவருகின்ற நிலையில் தமக்கான உச்சகட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முன்வரவேண்டும் என சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரை மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# பசளை, கிருமிநாசினி கிடைக்காததால் சிறுபோக வேளாண்மை பாதிப்பு




*(கிண்ணியா நிருபர்)*

கிண்ணியா குறிஞ்சாக்கேணி கமநல திணைக்களத்திக்குட்பட்ட வன்னியனார்மடு, புளியடிகுடா, பக்கிரான்வெட்டை முதலான பகுதிகளில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை சிறுபோக வேளாண்மை செய்கைக்கு போதிய அளவு உரம், கிருமிநாசினி கிடைக்கவில்லை என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

2400 ஏக்கர் பரப்பில் இம்முறை சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்தமுறை பசளை, கிருமிநாசினி முதலான பொருட்கள் கிடைக்காததனால் போதியளவு விளைச்சல் கிடைக்கவில்லை என மேலும் தெரிவிக்கின்றனர்.

இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக வேளாண்மை செய்கையிலும் உரிய முறையில் பசளை, கிருமிநாசினிகள் கிடைக்கவில்லை என தெரிவிக்கின்றனர். பெரும்போக வேளாண்மை செய்கை மேற்கொள்வதற்காவது உரிய நேரத்தில் உரிய உரம் மற்றும் கிருமிநாசினிகளை தந்தால் விவசாயிகள் வாழமுடியும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



*சர்வகட்சி ஆட்சியில பங்காளியாக வாங்கோ எண்டு சம்பந்தரிட்ட அமைச்சர் நிமால் சிறிபால கூப்பிடுறாரு எலுவா*

*சோதயன் குடும்பி சும்மா ஆடாது.. கூட்டமைப்பை பங்காளியாக வைச்சாத்தான் புலம்பெயர் நாட்டு நம்மட சனத்திட்ட நிதிய பெற்று வங்குரோத்த போக்கலாம் எண்டதுதான் அவரிட எண்ணம்.. ஆனால், கூட்டமைப்பை உள்ளே இழுத்து தமிழ்மக்களில இருந்து அன்னியப்படுத்தலாம் எண்டதுதான் நரிலிட நீண்டநாள் கனவு பாப்பம் மறுகா இதுக்கு சம்பந்தர் என்ன சொல்லப்போறாரு எண்ட.*

# சீனக்குடா கப்பல்துறை பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் பலி

*(அப்துல்சலாம் யாசீம்)*

திருகோணமலை - சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கப்பல் துறை பகுதியில் கட்டுத்துவக்கொன்று வெடித்ததில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இச்சம்பவம் நேற்று (03) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான எம்.நஸார் (60 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து கட்டுத்துவக்குடன் சென்றபோது தான் கொண்டுசென்ற கட்டுத்துவக்கு தானாகவே வெடித்ததில் காலில் காயம் ஏற்பட்ட நிலையில், இரத்தம் அதிகளவில் சென்று உயிரிழந்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.

ஆனாலும் குறித்த நபரின் சடலம் சம்பவ இடத்தில் இருப்பதாகவும் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணை முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்க உள்ளதாகவும் சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

# பதுக்கிவைக்கப்பட்டிருந்த 1540 லீற்றர் டீசலுடன் காத்தான்குடியில் வர்த்தகர் கைது

*(மட்டக்களப்பு நிருபர்)*

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி டெலிகம் வீதியில் 1540 லீற்றர் டீசலுடன் வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.றஹீம் தெரிவித்தார்.





மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரையின்பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் வழிகாட்டலில் பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலின்பேரில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 7 பெரல்கள், 4 கொள்கலன்களிலிருந்து இந்த எரிபொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கடந்த 10 நாட்களில் கதிர்காம யாத்திரைக்கான காட்டுப்பாதையில் 24 ஆயிரம் பேர் பயணிப்பு!

*(கல்லடி நிருபர்)*

கதிர்காமத்திற்கான காட்டுப்பாதையில் கடந்த 10 நாட்களில் 24 ஆயிரம் பேர் பயணித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவிக்கையில், இதுவரைகாலமும் இல்லாத அளவிலே இம்முறை அதிகளவான அடியார்கள் காட்டுப் பாதையில் பயணித்து இருக்கின்றார்கள். கொடியேற்ற தினத்தன்று அதிகமானோர் அதாவது 8 ஆயிரம் அடியார்கள் பயணித்திருப்பது இதுவே முதல் தடவை எனவும் தெரிவித்தார்.



கடந்த 31ஆம் திகதிவரை 22,500 பேர் காட்டுக்குள் பயணம் செய்ததாக இராணுவத்தினரின் பதிவுகளிலிருந்து தெரியவருகிறது என்றும், கடந்த வெள்ளிக்கிழமை (01) 1500 பேர் அளவிலே காலையிலும், மாலையிலும் காட்டுக்குள் பிரவேசித்ததாகவும் லாகுகலை பிரதேச செயலாளர் எஸ்.நவநீதராஜா தெரிவித்தார்.

அதேபோல், உகந்தை முருகன் ஆலய

இது இவ்வாறிருக்க, காட்டுக்குள் தொடர்ச்சியாக மழை பொழிந்து வருவதால் பாதயாத்திரிகர்கள் சிரமப்பட்டு, காட்டைக் கடந்து, கதிர்காமத்தை அடையவேண்டி இருப்பதாக கூறப்படுகிறது.

# ஓட்டோ சாரதிகள் சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்த அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அகமட் ஸகி





*(பொலிவேரியன் நிருபர்)*

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (02) மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளர் ஏ.ரீ.எம்.றாபி, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் (நளீமி), மாநகர சபை உத்தியோகத்தர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் தாம் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இதன்போது முன்வைத்தனர்.

முச்சக்கரவண்டிகளுக்கான கட்டணங்கள் ஒரு வரையறையின்றி மிக அதிகமாக அறவிடப்படுவதாக பொதுமக்கள் பலரும் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதாக மாநகர முதல்வரினால் முன்வைக்கப்பட்ட விடயத்திற்குஎரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் தாம் எதிர்கொள்ளும் சவால்கள், உதிரிப்பாக விலையேற்றம், வாழ்வாதார நெருக்கடிகள் போன்றவற்றினை கருத்திற்கொண்டு தற்காலிகமாக ஆரம்ப கட்டணமாக 200 ரூபாவும், அடுத்துவரும் ஒரு கிலோ மீற்றருக்கு 100 ரூபா விகிதத்தில் அறவிடுவதாக ஓட்டோ சாரதிகள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்ததுடன், எதிர்காலத்தில் நிலைமைகள் சுமூகமடைந்து எரிபொருள் விநியோகம் சாதாரண நிலைமைக்குத் திரும்பும் பட்சத்தில் குறித்த கட்டணங்களை உரிய நியம விலையில் மாற்றிக்கொள்ளவும் இதன்போது இணக்கம் தெரிவித்தனர்.

# வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் மட்டக்களப்புக்கு விஜயம்







*(மட்டக்களப்பு நிருபர்)*

வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ நேற்று முன்தினம் (02) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார்.

குறித்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது அமைச்சர் நளின் பெர்னாண்டோ கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுவரும் சதொச மொத்தவிற்பனை நிலையத்தை பார்வையிட்டுள்ளார்.

கள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் சதொச மொத்தவிற்பனை நிலையத்தைப் பார்வையிட்டதுடன், அதற்கு அருகாமையில் தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ள சதொச விற்பனை நிலையத்தையும் பார்வையிட்டார்.

குறித்த சதோச விற்பனை நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளை அதிகாரிகளிடமும், பொருட்கொள்வனவில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களிடமிருந்தும் கேட்டறிந்துகொண்டதுடன், காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது பொருட்கொள்வனவில் ஈடுபட்டிருந்த பெண் ஒருவர் தமக்கு பால்மா இங்கு கிடைப்பதில்லையென கூறியதைத் தொடர்ந்து அமைச்சர் தொலைபேசி வாயிலாக உரிய அதிகாரியை தொடர்புகொண்டு மாவட்டத்திற்கென ஒரு தொகுதி பால்மாவை அனுப்பிவைக்குமாறு பணித்ததுடன், சதொசவின் விற்பனைக்காகவும் பால்மாவை அனுப்பிவைக்குமாறும் பணித்திருந்தார்.

அத்தோடு தான் ஜனாதிபதியிடம் கடந்த அமைச்சரவை கூட்டத்தின்போது பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும், மக்கள் மிகுந்த கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள் என கூறியிருப்பதாகவும் இதன்போது பொருட்கொள்வனவில் ஈடுபட்டிருந்த மக்களிடம் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் குறித்த கள விஜயத்தின்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் சதொச நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

# திருமலை பொது வைத்தியசாலை தாதியர்கள் அறுவருக்கு கொரோனா

*(அப்துல்சலாம் யாசீம்)*

திருகோணமலை பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றி வந்த தாதியருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் இன்று (02) மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனை மூலம் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

தற்போது நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் வீதம் அதிகரித்துவரும் நிலையில், திருகோணமலை மாவட்டத்திலும் நாளுக்கு நாள் தொற்றுக்குள்ளாவோரின் வீதம் அதிகரித்து வருகின்றது.

கடந்த இரண்டு நாட்களுக்குள் ஆறு பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவசர சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றிவந்த தாதியருக்கே நேற்று முன்தினம் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வருபவர்கள் கட்டாயமாக முகக்கவசங்களை அணிந்து வருமாறும் சமூக இடைவெளிகளை பேணுமாறும் மக்கள் நடமாடும் இடங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும் திருகோணமலை சுகாதாரத் திணைக்களம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# Commonwealth Games - 2022

## இரு இலங்கையர்கள் இங்கிலாந்தில் தலைமறைவு




இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் 22ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஐந்தாவது நாள் நிகழ்வுகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இலங்கை தடகள வீரர் மற்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் காணாமல்போனதையடுத்து பேர்மிங்ஹாம் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கை முகாமிலிருந்து பெண் ஜூடோ வீரரும், இலங்கை ஜூடோ அணியின் முகாமையாளரும் காணாமல்போயுள்ளதாக ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன. பெண் ஜூடோ வீராங்கனை தனது முதல் சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து, இரண்டு இலங்கையர்களும் காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் காணாமல்போனது குறித்து இலங்கை அணி நிர்வாகம் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தது.

இதன் விளைவாக, இலங்கைக் குழுவின் பிரதம பொறுப்பதிகாரி மேலும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக இலங்கைக் குழுவின் அனைத்து கடவுச்சீட்டுகளையும் பெற்றுள்ளார். குறித்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்காக இலங்கை அணிக்கு 180 நாள் விசா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## தேசிய சாதனையை புதுப்பித்த கயந்திகா

22ஆவது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் முதல் சுற்றில் பங்குபற்றிய இலங்கையின் கயந்திகா அபேரட்ன 5ஆவது இடத்தைப் பெற்றதன் மூலம் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தார். முதல் சுற்று ஓட்டத்தில் ஆரம்பத்திலிருந்து பின்னடைவு கண்ட கயந்திகாவினால் எந்த சந்தர்ப்பத்திலும் மீளமுடியாமல் போனது. எவ்வாறாயினும் போட்டி தூரத்தை 2 நிமிடங்கள், 1.20 செக்கன்களில் ஓடி முடித்த கயந்திகா, தனது சொந்த தேசிய சாதனையை 0.22 செக்கன்களால் முறியடித்து புதிய தேசிய சாதனை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




## கிரிக்கெட்டிலும் கோட்டை விட்ட இலங்கை

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் கிரிக்கெட் தொடரில் குழு 'பி'யில் இடம்பிடித்துள்ள இலங்கை அணி, தங்களது இரண்டாவது போட்டியில் நேற்று முன்தினம் நியூசிலாந்து அணியை எதிர்கொண்டது. முதல் போட்டியில் இங்கிலாந்து அணியிடம் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, நியூசிலாந்துடனான இரண்டாவது போட்டியிலும் தோல்வியைத் தழுவி அரையிறுதிக்கு தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

பேர்மிங்ஹாம் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற நியூசிலாந்து – இலங்கை மகளிர் அணிகளுக்கிடையிலான போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 147 ஓட்டங்கள் பெற்றுக்கொண்டது. 148 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பாடிய இலங்கை மகளிர் அணி, 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 102 ஓட்டங்கள் மாத்திரமே எடுத்து போட்டியில் தோல்வியைத் தழுவியது.

## ஆசியக் கிண்ணம் 2022

## முதல் ஆட்டத்தில் ஆப்கானை எதிர்கொள்ளும் இலங்கை

MEN'S ASIA CUP 2022

| MATCH | DAY | DATE | TEAMS | GROUP | VENUE | TIME (GST) |
|---|---|---|---|---|---|---|
| 1 | Saturday | 27-Aug | Sri Lanka vs Afghanistan | B | Dubai | 18:00 |
| 2 | Sunday | 28-Aug | India vs Pakistan | A | Dubai | 18:00 |
| 3 | Tuesday | 30-Aug | Bangladesh vs Afghanistan | B | Sharjah | 18:00 |
| 4 | Wednesday | 31-Aug | India vs Qualifier | A | Dubai | 18:00 |
| 5 | Thursday | 1-Sep | Sri Lanka vs Bangladesh | B | Dubai | 18:00 |
| 6 | Friday | 2-Sep | Pakistan vs Qualifier | A | Sharjah | 18:00 |
| 7 | Saturday | 3-Sep | B1 vs B2 | Super 4 | Sharjah | 18:00 |
| 8 | Sunday | 4-Sep | A1 vs A2 | Super 4 | Dubai | 18:00 |
| 9 | Tuesday | 6-Sep | A1 vs B1 | Super 4 | Dubai | 18:00 |
| 10 | Wednesday | 7-Sep | A2 vs B2 | Super 4 | Dubai | 18:00 |
| 11 | Thursday | 8-Sep | A1 vs B2 | Super 4 | Dubai | 18:00 |
| 12 | Friday | 9-Sep | B1 vs A2 | Super 4 | Dubai | 18:00 |
| 13 | Sunday | 11-Sep | Final 1st Super 4 vs 2nd Super 4 | | Dubai | 18:00 |

ஆறு அணிகள் பங்கேற்கும் 2022ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரானது இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஷார்ஜா மற்றும் டுபாயில் எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் செப்டெம்பர் 11ஆம் திகதிவரை நடைபெறவுள்ள நிலையில், குறித்த தொடருக்கான போட்டி அட்டவணை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட இந்தப் போட்டி அட்டவணையின்படி இரண்டு குழுக்களாக அணிகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் 'ஏ' குழுவில் இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் இடம்பிடித்துள்ளதுடன், 'பி' குழுவில் இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றுடன் தகுதிச்சுற்றில் வெற்றிபெறும் அணி இடம்பெறுகிறது. தகுதிச்சுற்றில் ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், சிங்கப்பூர் மற்றும் ஹொங்கொங் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

குழுநிலை போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 4 சுற்றுக்குத் தகுதிபெறும். சுப்பர் 4 சுற்றில் ஒவ்வொரு அணிகளும் எதிரணிகளுடன் தலா ஒவ்வொரு முறை மோதும். சுப்பர் 4 சுற்றில் முதலிரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும்.

தொடரின் முதல் போட்டியில் இலங்கை அணியானது, ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்கின்ற அதேவேளை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான எதிர்பார்ப்புமிக்க போட்டியானது 28ஆம் திகதி டுபாயில் நடைபெறுகிறது.

## முதலிடத்தில் ரோயல், இஸிப்பத்தான கல்லூரிகள்



முழு உலகிலும் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக கடந்த இரு வருடங்கள் தடைப்பட்டிருந்த இலங்கையின் டயலொக் பாடசாலை ரக்பி லீக் - 2022 போட்டிகள் கடந்த ஜூன் மாதம்முதல் நடைபெற்றுவரும் நிலையில், முதல் சுற்றுப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன.

ஆறு வாரங்கள் நடைபெற்ற முதல் சுற்று முடிவுகளின்படி குழு 1 ஏ பிரிவில் கொழும்பு ரோயல் கல்லூரி அணி 5 போட்டிகளில் விளையாடி 4 வெற்றிகள், ஒரு தோல்வி ஆகியவற்றுடன் மொத்தமாக 23 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் காணப்படுகிறது. குழு 2 ஏ பிரிவில் இஸிப்பத்தான கல்லூரி 5 போட்டிகளில் 5 வெற்றிகளைக் குவித்து மொத்தமாக 27 புள்ளிகளுடன் முதலிடத்தில் காணப் படுகிறது. அந்தவகையில் சுப்பர் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகிறது. அன்றைய தினம் வெஸ்லி கல்லூரி மற்றும் ரோயல் கல்லூரி ஆகியன சி.ஆர். என்ட் எவ்.சி. மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

Dialog
SCHOOLS
RUGBY

உலக செய்திகள்

## சீனாவை சீண்டும் அமெரிக்கா:

# கடும் எதிர்ப்பை மீறி தாய்வான் சென்ற நான்சி

## சூழ்ந்தது போர் மேகம்; தாக்குப்பிடிக்குமா தாய்வான்?

சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசி தாய்வான் சென்றடைந்தார். தாய்வானில் தரையிறங்கும்போது விமானப்படை ஜெட் விமானங்கள் அவருக்கு பாதுகாப்பு அளித்தன.

நான்சி பெலோசியின் தாய்வான் பயணத்துக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், தாய்வானின் வான்பரப்பில் 21 போர் விமானங்களை பறக்கவிட்டு சீனா தமது எதிர்ப்பை பதிவு செய்துள்ள நிலையில், அங்கு போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. ஒருவேளை போர் ஏற்பட்டால் சீனாவின் தாக்குதலுக்கு முன்பு தாய்வான் தாக்குப்பிடிக்குமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

பல்வேறு ஆசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணத்தை தொடங்கியிருக்கும் அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி, சீனாவின் கடும் எதிப்பையும் மீறி நேற்றுமுன்தினம் இரவு தாய்வான் சென்றடைந்தார். 25 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கா உயர்மட்ட தலைவர் ஒருவர் தாய்வானுக்குச் செல்வது இதுவே முதன்முறையாகும்.

தாய்வானை சீனா தங்களது நாட்டின் ஒரு பகுதியாக இன்னமும் கூறி வருவதாலும், நான்சி பெலோசியின் வருகைக்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் ஏற்பட்டுள்ள பதற்றத்தாலும் மலேஷியா தலைநகர் கோலாலம்பூரிலிருந்து தாய்வானுக்கு வந்த நான்சி பெலோசிக்கு தாய்வான் விமானப்படையின் போர் விமானங்கள் பாதுகாப்பு அளித்தன.

அமெரிக்கா எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில், தனது 4 போர்க் கப்பல்களை தாய்வானின் கிழக்கு பகுதியில் நிறுத்தியுள்ளது. இதில் ஒரு விமானந்தாங்கி போர்க்கப்பலும் அடங்கும்.

நான்சியை வரவேற்கும் வகையில் தாய்வானின் உயரமான கட்டடமான தைபே 101இல், வாசகங்கள் ஒளிரவிடப்பட்டன.

தாய்வானில் தரையிறங்கிய சில நிமிடங்களில் நான்சி தமது ட்விட்டரில், ஜனநாயகத்தைக் காக்க தங்கள் ஆதரவை உறுதிப்படுத்தவே தங்கள் குழுவினருடன் தாய்வானுக்கு வந்திருப்பதாகவும், தாய்வான் பயணம் நீண்டகால அமெரிக்காவின் கொள்கைக்கு முரணாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நான்சி தாய்வானில் தரையிறங்கிய பிறகு சீனா வெளியிட்டுள்ள அறிக்கையில், அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஆபத்தானது என்றும், ஒரே சீனக் கொள்கையை அமெரிக்கா தொடர்ந்து சிதைத்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியது.

நெருப்புடன் விளையாடுவது போன்ற இந்த நகர்வுகள் மிகவும் ஆபத்தானவை என்றும், நெருப்புடன் விளையாடுபவர்கள் இதனால் அழிந்துபோவார்கள் என்றும் சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.



நான்சியின் தாய்வான் வருகைக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வரும் நிலையில், நேற்றுமுன்தினம் சீன போர் விமானங்கள் தாய்வான் கடற்பகுதியை பிரிக்கும் மத்தியகோட்டிற்கு அருகே பறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்வானை சுற்றி ஏவுகணை சோதனைகள் மற்றும் இராணுவப் பயிற்சிகளை நடத்தப்போவதாகவும் சீனா அறிவித்துள்ளது.

செவ்வாய் இரவுமுதல் தாய்வான் அருகே கூட்டு இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், தாய்வானின் வடக்கு, தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் கூட்டு வான் மற்றும் கடல் பயிற்சிகள், நீண்டதூர துப்பாக்கிச் சூடு மற்றும் ஏவுகணை சோதனைகள் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளது.

நான்சியின் தாய்வான் பயணம் தொடர்பாக அமெரிக்கத் தூதருக்கு சீனா சம்மன் அனுப்பியுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு சீனாவுக்கான அமெரிக்கத் தூதர் நிக்கோலஸ் பேர்ன்ஸை அவசரமாக அழைத்த சீன துணை வெளியுறவு அமைச்சர் Xie Feng, நான்சி தாய்வான் சென்றுள்ளதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்.



இது அமெரிக்கா - சீனா அரசியல் அடித்தளத்தில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்த அவர், அமெரிக்கா அதன் தவறுகளுக்கு விலை கொடுக்கவேண்டும் என்றும், தனது தவறுகளை உடனடியாக திருத்திக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

**பாதுகாப்புப் படை வீரர்கள் எவ்வளவு?**

ஒருவேளை சீனா - தாய்வான் இடையே போர் ஏற்பட்டதால் சீனாவின் தாக்குதலை தாய்வான் தாக்குப்பிடிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இதனை இருநாட்டின் படைப் பலங்கள் அடிப்படையில் பார்க்கும்போது,

சீனாவில் மொத்தம் 20 இலட்சத்து 35 ஆயிரம் படை வீரர்கள் உள்ளனர். இதில் 9 இலட்சத்து 65 ஆயிரம் பேர் இராணுவ வீரர்களாகவும், 2 இலட்சத்து 60 ஆயிரம் பேர் கடற்படையினராகவும், 3 இலட்சத்து 95 ஆயிரம் பேர் விமானப்படையினராகவும் பணிபுரிகின்றனர். மேலும் 5 இலட்சத்து 10 ஆயிரம் பேர் ரிசர்வ் வீரர்களாக உள்ளனர்.

ஆனால், தாய்வானில் மொத்த படைவீரர்கள் 1.69 இலட்சம் பேர்தான். இதில் இராணுவத்தில் 94 ஆயிரம் பேரும், கடற்படையில் 40 ஆயிரம் பேரும், விமானப்படையில் 35 ஆயிரம் பேருமே பணியிலுள்ளனர். இருப்பினும், ரிசர்வ் வீரர்களாக 16 இலட்சத்து 57 ஆயிரம் பேர் உள்ளனர்.

**விமானம், கப்பல்கள் எவ்வளவு?**

மேலும் தளவாடங்களை பொறுத்தமட்டில் சீனாவிடம் 5,400 இராணுவ வாகனங்கள் (டேங்குகள்) உள்ளன. 3,227இற்கும் அதிகமான விமானங்களும், 59 நீர்மூழ்கிக் கப்பல்களும், 86 கடற்படைக் கப்பல்களும் உள்ளன. மேலும், சீனாவிடம் 9,834 பீரங்கி குண்டுகளும் உள்ளன. அந்த வகையில் தாய்வானில் 650 இராணுவ வாகனங்கள் (டேங்குகள்), 504இற்கும் அதிகமான விமானங்கள், 4 நீர்மூழ்கிக் கப்பல்கள், 26 கடற்படைக் கப்பல்கள், 2,093 பீரங்கிகள் மட்டுமே உள்ளன. இவை அனைத்தும் 'தி மிலிட்டரி பேலன்ஸ் 2022' வெளியிட்ட தகவல் அடிப்படையிலானது. இதனடிப்படையில் பார்த்தால் தாய்வானை விட சீனாவே பலமானதாக உள்ளதுன.

**அமெரிக்கா உதவ வாய்ப்பு**

மேலும் உலகளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக டொப் 3 இடத்தில் சீனாதான் பாதுகாப்புப் பிரிவுக்கு அதிகமாக செலவிடும் என்றால் தாய்வான் எப்படி சீனாவின் தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியும். இதில் சீனாவின் கையே பலமடங்கு ஓங்கியுள்ளது. பாதுகாப்புப் பிரிவிலுள்ள வீரர்கள், தளவாடங்கள் அடிப்படையில் சீனாவை ஒப்பிடும்போது தாய்வான் குறைந்த பலம் கொண்டுள்ளது. இருப்பினும், சீனாவுக்கு எதிரான நிலை[illegible] அமெரிக்கா [illegible] வளர்ந்த நாடுகள் உள்ளன. இதனால் ஒருவேளை போர் ஏற்பட்டால் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தாய்வானுக்கு நிதி, ஆயுத உதவி வழங்க வாய்ப்புள்ளது. இருப்பினும், அமெரிக்காவை மட்டுமே நம்பி போரை எதிர்க்கொள்ள தாய்வான் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.




Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7